★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 5 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 31 | Monday 05, February, 2024 | 16பக்கங்கள் | 50/-

## சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம்

### தாய்லாந்து மொழியிலும் அறிவிப்பு



காலிமுகத் திடலில் நடைபெற்ற இலங்கையின் 76ஆவது தேசிய சுதந்திர விழாவில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது சிறப்பம்சமாகும். சுதந்திர தினக்கொண்டாட்டத்தின் ஆரம்பத்தில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டு இறுதியில் தமிழில் தேசிய 06

# 76 ஆவது சுதந்திர தின விழா

## ஜனாதிபதி தலைமையில் நேற்று காலிமுகத்திடலில் கோலாகலம்

### தாய்லாந்து பிரதமர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பு

### புனித பாப்பரசர் பிரான்சிஸ், மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் உட்பட உலகத் தலைவர்கள் வாழ்த்து







**சாதிக் ஷிஹான்**

இலங்கையின் 76 ஆவது தேசிய சுதந்திர தின விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் "புதிய தேசம் அமைப்போம்" எனும் தொனிப்பொருளில் நேற்று (04) காலை கொழும்பு காலி முகத்திடலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு உலகிலுள்ள அனைவரின் ஆதரவோடும் மீண்டும் கட்டியெழுப்பப்படும் இலங்கையின் அடையாளத்தை உலகுக்கு எடுத்துரைப்பதே இதன் நோக்கமாகும்.

ஜனாதிபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் இலங்கை இராணுவத்தினர் இசைவாத்தியங்களை இசைத்த பின்னர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மாஅதிபர் ஆகியோரால் ஜனாதிபதி, விழா நடைபெறும் மைதானத்தின் கொடிக் கம்பம் அருகே அழைத்து வரப்பட்டார். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மகுல் இசை மற்றும் சக் ஓசைக்கு மத்தியில் ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து 105 பாடசாலை மாணவிகள் தேசிய கீதத்தை பாடினர். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவிகள் ஜெயமங்கள கீதம் இசைத்தனர்.

தாய்நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வைக்கப்பட்டதோடு இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் 76 ஆவது சுதந்திர தின விழா அணிவகுப்பு பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய கெடட் படையினால் சிறப்பாக முன்வைக்கப்பட்டது. இலங்கை தேசத்தின் பலத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்தும் வகையில் இராணுவப் படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் 06

## யாழில். தேசிய கொடிகளுடன் 76ஆவது சுதந்திர தின பேரணி




இலங்கையின் 76ஆவது சுதந்திர தினமான நேற்று (04) யாழ்ப்பாணத்தில் சுதந்திர தின பேரணியொன்று நடத்தப்பட்டுள்ளது. யாழ். மக்களும் வெளி மாவட்ட மக்களும் இப் பேரணியில் கலந்துகொண்டனர். யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் ஆரம்பமான 06

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல திடீர் சுகவீனமடைந்துள்ள நிலையில் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் ஆணையாளருமான காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் வைத்து திடீர் சுகவீனமுற்ற நிலையில் அவர் சிறைச்சாலை மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட்டபோது மருத்துவரின் பரிந்துரைக்கிணங்க அமைச்சர் சிறைச்சாலை வைத்தியசாலையில் 06

### இலங்கை – தாய்லாந்துக்கு இடையே

## பொருளாதார உறவுகள் புத்துயிர் பெற வர்த்தக சமூகம் ஒன்றிணைய வேண்டும்

### வர்த்தக சந்திப்பில் இருநாட்டு தலைவர்களும் வலியுறுத்து



இந்து சமுத்திரத்தில் இலங்கை மற்றும் ஆசிய பசுபிக் வலயத்தில் தாய்லாந்தின் மூலோபாய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இலங்கை தாய்லாந்து பொருளாதார உறவை மீள கட்டியெழுப்புவதற்கு இரு நாடுகளின் முதலீட்டாளர்களும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரினார்.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் உள்ளிட்ட தூதுக்குழுவினரின் இலங்கை விஜயத்துடன் இணைந்ததாக (03) கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை 06

## கல்வித்துறை, தொழில்நுட்பத்துறைக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்கத் தயார்

### புகழ்பெற்ற விஞ்ஞானியும் அமெரிக்க பேராசிரியருமான சிவா சிவநாதன் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையில் இலவசக் கல்வியை பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று சிறந்த வருமானம் ஈட்டுபவர்கள் தங்களது வருமானத்தில் 5 வீதத்தை தாய்நாட்டின் வளர்ச்சிக்காக வழங்கினால் நாடு மிக விரைவில் பெரும் முன்னேற்றத்தை அடையும் என உலக புகழ்பெற்ற விஞ்ஞானியும் பேராசிரியருமான சிவா சிவநாதன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர் நேற்றைய தினம் கொழும்பு சங்ரில்லா ஹோட்டலில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் பேராசிரியர் சிவா சிவநாதன் ஆகியோரின் பங்குபற்றலுடன் சிகாகோ ஹி இலிநொய்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களுக்கிடையில் கல்வி மற்றும் ஆராய்ச்சி பரிமாற்றம் தொடர்பான 06

### சுதந்திர தினத்தையொட்டி

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் 754 சிறைக் கைதிகள் நேற்று விடுதலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தையொட்டி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் 754 சிறைக்கைதிகள் நாடளாவிய ரீதியில் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 06

## பாடசாலைகள் ஆரம்பம்; கல்வி அமைச்சு அறிவிப்பு



அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

உயர்தரப் பரீட்சை காரணமாக கடந்த டிசம்பர் 23 ஆம் திகதி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டதுடன், பெப்ரவரி மாதம் முதலாம் திகதி பாடசாலை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டது. 06

### பாம்பன் அருகே திருச்சி சுங்கத்துறையினரால்

## இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்திய 4.6 Kg தங்கம் பறிமுதல்

### சுமார் ரூ. 11 கோடி 28 இலட்சம் ரூபா பெறுமதி




**மன்னார் குறூப் நிருபர்**

இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட சுமார் 03 கோடி மதிப்பிலான தங்கம் பாம்பன் அருகே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவில் சுமார் 11 கோடி 28 இலட்சம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக 06

### நிலத்தடி குழாய் பொருத்தும் நடவடிக்கைகளுக்காக

## கொள்ளுப்பிட்டி, கொம்பெனி வீதி பகுதிகளில் இன்று முதல் சில வீதிகளுக்குப் பூட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பில் கொள்ளுப்பிட்டி, கொம்பனி வீதி பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட சில வீதிகள், திருத்த வேலைகள் காரணமாக கட்டம் கட்டமாக மூடப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் கொள்ளுப்பிட்டி மற்றும் கொம்பெனி வீதி பிரதேசங்களில் உத்தரானந்த மாவத்தை, 06

### சுதந்திர தினத்ததை முன்னிட்டு

## 211 இராணுவ அதிகாரிகள், 1,239 வீரர்களின் தரம் உயர்வு

**ஸாதிக் ஷிஹான்**

76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் 211 அதிகாரிகள் மற்றும் 1,239 வீரர்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

நிரந்தரம் மற்றும் தொண்டர் அடிப்படையில் உள்ள 1,450வீரர்களே வெற்றிடத்தின் அடிப்படையில் அடுத்த நிலைக்கு இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயின் பரிந்துரைக்கமைய முப்படைகளின் தளபதியான, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி முதல் 06

# இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின நிகழ்வு














தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 5 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.20
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் தை 22
ராகுகாலம் : காலை : 8.05 - 9.35வரை
சுபநேரம் : பகல் : 12.35 - 02.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## அகில இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம ஆணையாளராக தீபால்



அகில இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம ஆணையாளராக தீபால் குணவர்தன அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகரான சம்பிகா லோவ், உலக சுதந்திர சாரணர் சம்மேளனத்தின் தலைவர் கிளவுட்ஸ் டிகெடாவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டது. கேகாலை மயூரபாத தேசிய பாடசாலையில் கல்வி கற்ற குணவர்தன, ஜனாதிபதி பதக்கத்தையும் வென்றுள்ளார். இலங்கை சாரணர் சங்கத்திலும் பல்வேறு பதவிகளை வகித்துள்ள இவர், 1975 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக சாரணர் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

# இலங்கை – தாய்லாந்து வர்த்தக ஒப்பந்தம் ஒற்றுமையின் மைல்கல்

## இலக்குகளை அடைய இலங்கையுடன் இணைந்து செயற்படுவோம் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா

## ஜனாதிபதி ரணில்

சுபீட்சமான இலங்கைக்காக உலக நாடுகளுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

தாய்லாந்து உள்ளிட்ட கிழக்காசிய நாடுகள், ஆசியான் வலய நாடுகள் வசமாக காணப்படும் எதிர்காலத்துக்கான முன்னோடி பொருளாதார வலுவைக் கொண்டிருக்கும் தரப்புகளுடன் இருதரப்பு வர்த்தகத்தை பலப்படுத்திகொள்ள இலங்கை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசினுடனான இருதரப்பு சந்திப்பின் பின்னர் (03) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இரு தலைவர்களினதும் பங்கேற்புடன் இடம்பெற்ற இணை ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத்தெரிவித்தார்.

இணை ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், தாய்லாந்து பிரதமர், ஜனாதிபதி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்திலும் பதிவிட்டார்.

இணை ஊடகவியலாளர் மாநாட்டில், தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவீசின், இலங்கை ஜனாதிபதியுடனான இருதரப்பு கலந்துரையாடல்கள் இரு நாடுகளுக்கும் இடையில் மட்டுமன்றி,





BIMSTEC, இந்து சமுத்திர எல்லை நாடுகளின் கூட்டமைப்பான IORA மற்றும் ASEAN உள்ளிட்ட பிராந்திய அமைப்புக்களின் இலக்குகளை அடையவும் வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

2025 2027 வரையிலான மனித உரிமைகள் பேரவையின் உறுப்புரிமைக்கான ஆசியான் பிராந்திய அமைப்பின் பிரதிநிதித்துவமாக தாய்லாந்து செயற்படுகிறது என்றும் தாய்லாந்து பிரதமர் குறிப்பிட்டார். இந்த மாநாட்டின் உறவுகளை மேம்படுத்துவதில் தாய்லாந்து மத்தியஸ்த அந்தஸ்தை கொண்டுள்ளதென தெரிவித்த தாய்லாந்து பிரதமர், தாய்லாந்தும் இலங்கையும் இரு நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக மனித உரிமைகளை மேம்படுத்துவதில் இணைந்து செயல்பட முடியும் என்றும் தாய்லாந்து பிரதமர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவீசின், பிரதி பிரதமர், வர்த்தக அமைச்சர் மற்றும் வெளிவிவகார பிரதி அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவின் இலங்கை விஜயம் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையின் 76ஆவது தேசிய சுதந்திர விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்குமாறு எனது அழைப்பை ஏற்று வருகை தந்த பிரதமர் தவீசினுக்கு நன்றிகள்.

அத்துடன், இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை விரைவுபடுத்துவதே தாய்லாந்து பிரதமரின் விஜயத்தின் முதன்மை நோக்கமாகும். இதுவரை நமது இரு நாடுகளும் கவனம் செலுத்தாத விடயங்களின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SLTFTA) இலங்கை

06

## வருடாந்த கலால் வரி அனுமதிப்பத்திர கட்டணங்களில் மீண்டும் திருத்தம்

### பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமுல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வருடாந்த கலால் வரி அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்படும் கட்டணங்கள் மீள திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கலால் வரி கட்டளைச் சட்டத்திற்கிணங்க ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கலால் வரி அனுமதிப்பத்திரக் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அந்த அதிகாரி எவ்வாறாயினும் மேற்படி திருத்தங்கள் தொடர்பில் மேற்படி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வோர் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள நிலையில் மீண்டும் ஒரு தடவை அந்த வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இரண்டு கோடியே 50 இலட்சமாக அதிகரிக்கப்பட்டிருந்த வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணத்தை 20 இலட்சம்

06





இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வுகள் கொழும்பு 11 இரண்டாம் குறுக்கு தெரு அல் ஜாமியுல் அழ்பர் (ரெட் மொஸ்க்) ஜும்ஆ பள்ளி வாசலில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸலின் வழிநடத்தலில் நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் அதிகாரிகள், பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹாரிஸ் அன்வர் உள்ளிட்ட நிருவாகிகள் உலமாக்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். இதன் போது தேசியக் கொடியை அமைச்சர் அலி ஸப்ரி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து கொழும்பு ஸாகிராக் கல்லூரி மாணவர்களினால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் பள்ளி வாசலின் இமாமினால் கிராஅத் ஓதப்பட்டதுடன் வரவேற்புரையை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இஸ்டம்.ஏ.எம் பைஸல் வழங்கினார். தொடர்ந்து விசேட துஆ பிரார்த்தனையை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் செயலாளர் அஷ் ஷெய்க் அர்கம் நூராமித் வழங்கினார்.
(கொழும்பு தினகரன் நிருபர்)



இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தையொட்டி கொழும்பு பம்பலப்பிட்டி, ஸ்ரீ சார்வத்த சித்தி விநாயகர் ஆலயமான வஜிரா பிள்ளையார் ஆலயத்தில் விஷேட பூஜைகள் நடைபெற்றன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிவஸ்ரீ சச்சிதானந்த குருக்கள் தலைமையில் நடைபெற்ற சுதந்திரதின விசேட பூஜையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஷேட அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். சின்மயா மிஷன் சுவாமி, குணாதீதானந்த சரஸ்வதி, சுவாமி அக்ஷராத்மனாந்த மகராஜ் பணிப்பாளர் யதுகுலசிங் அனிருத்தனன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். படத்தில் அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு பூஜைதட்டு வழங்கப்படுவதை காணலாம்.

## ஹம்பாந்தோட்டையில் வாகன விபத்து ஐவர் படுகாயம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஹம்பாந்தோட்டை பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ள வாகன விபத்தொன்றில் 6 நபர்கள் படுகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை தங்காலை பிரான வீதியில் ஹுங்கம பகுதியில் மேற்படி வாகன விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அம்பலங்கொடையிலிருந்து தங்காலையை நோக்கி பயணித்த காரொன்று புங்கம பகுதியிலிருந்து அமபலாந்தொட்டை பகுதிக்குப் பயணித்துக் கொண்டிருந்த வானொன்றும் நேருக்குநேர் மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு அழைத்து வரப்பட்ட கைதி தப்பியோட்டம்

### களுத்துறை நீதிமன்ற வளாகத்தில் சம்பவம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக அழைத்து வரப்பட்ட சந்தேக நபர் ஒருவர் களுத்துறை நீதிமன்ற வளாகத்தில் வைத்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கொள்ளை மற்றும் போதைப் பொருள் வர்த்தக சம்பவம் தொடர்பில் சந்தேகநபருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில் சந்தேகநபர் அளுத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்த நிலையிலேயே அவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் பொலிஸ் ஜீப் ஒன்றில் நீதிமன்ற வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அங்கு அவரைக் கீழே இறக்குவதற்காக கதவு திறக்கப்பட்டபோது அவருடன் கைவிலங்கிடப்பட்ட மற்ற சந்தேக நபரின் முகத்தில் தாக்கி கைவிலங்குகளை கழற்றி விட்டு அவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்

நீதிமன்றில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சந்தேக நபரை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த அதிகாரிகள் அவரை துரத்திச் சென்ற போதும் சந்தேக நபர் அவர்களிடமிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை கண்டுபிடித்து மீண்டும் கைது செய்யும் நடவடிக்கைகளில் அளுத்கம பொலிஸார் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

## கிழக்கு ஆளுநர் செந்தில் தலைமையில் மட்டக்களப்பில் சுதந்திரதின நிகழ்வுகள்

### தமிழில் தேசிய கீதம் இசைப்பு





இலங்கையின் 76ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வுகள் கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மட்டக்களப்பில் பிரமாண்டமாக நடைபெற்றது. மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமானின் வருகையுடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இலங்கையில் வாழும் நான்கு தேசிய இனத்தவரின் வரவேற்பும் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு அளிக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புகளும் நடைபெற்றன.

பேண்ட் வாத்தியங்கள், கலை, கலாச்சார நிகழ்வுகளும் நடைபெற்றது. சுதந்திர நிகழ்வின் சிறப்பு அழைப்பாளராக இந்தியாவின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் அப்துல்லா கலந்துகொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர், முப்படையினர், பிரதம செயலாளர், அரசாங்க அதிபர்கள், அமைச்சின் செயலாளர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## யாழிலிருந்து தப்பி வந்த ஆவா குழு உறுப்பினர் கல்கிசையில் கைது

### அவரிடமிருந்து போதைப் பொருள் கைப்பற்றல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ள ஆவா குழு உறுப்பினரான பிரபாகரன் கௌசிகன் என அழைக்கப்படும் பிரபா கல்கிசை பகுதியில் மறைந்து வாழ்ந்த நிலையில் பாணந்துறை ஊழல் மோசடி ஒழிப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பகுதியில் இரண்டு மாடி வீடு ஒன்றில் அவர் மறைந்திருந்து போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 1300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் ஆவா குழு சின்னம் பொறித்த துண்டுப் பிரசுரங்களும்

அந்த சின்னம் பதித்த 100 ரூபா நாணயத்தாள் ஒன்றும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பல்வேறு குற்றச் செயல்கள் காரணமாக அவருக்கு எதிராக யாழ்ப்பாண நீதிமன்றத்தால் நான்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆவா குழு உறுப்பினரான அவர் துபாய் நாட்டுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் கல்கிசை பகுதியில் யசோரா புர மாடி வீட்டில் மறைந்து வாழ்ந்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

புத்தளம், வெளிவெட்ட வீதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக கிரியைகள் இன்று (05) காலை 5.00 மணி முதல் ஆரம்பமாகிறது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெறும்.

தொடர்ந்து கிரியைகள் மற்றும் மகா கும்பாபிஷேக விஷேட பூஜைகள் நடைபெறவுள்ளன.

08 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிமுதல் விசேட பூஜைகள் நடத்தப்பட்டு அடியார்களுக்கு அன்னதானம் இடம்பெறும்.

## எனது கூற்று கட்சிக்கு எதிரானதல்ல

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பத்தை வழங்கவேண்டுமென தாம் தெரிவித்த கூற்றைவைத்து, தாம் ராஜபக்ஷக்களுக்கு எதிரானவன் என சிலர் காட்ட முற்படுவதை தாம் முற்றாக நிராகரிப்பதாக ஆளும்கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த வேறுவொரு மாற்றுவழி கிடையாது என்பதாலேயே தாம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பாக கருத்துக்களை வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு தாம் தெரிவித்ததை வைத்துக்கொண்டு தாம் ரணில் விக்கிரமசிங்கவின் கையாள் என்றும் கட்சியை சிதைப்பதற்கு தயாராவதாகவும், அத்துடன் ராஜபக்ஷவுக்கு எதிரானவன் என்றும் சிலர் குற்றங்களை சுமத்திவருவதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், அதனை முற்றாக நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார். தாம் எந்த செயற்பாடுகளையும் தமது மனச்சாட்சிக்கு உண்மையாகவே மேற்கொள்வதாக தெரிவித்துள்ள அமைச்சர், அது எந்தவிதத்திலும் கட்சிக்கோ அல்லது ராஜபக்ஷக்களுக்கோ எதிரானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 24

## குறள் தரும் சிந்தனை



பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

வாழ்க்கை எனும் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைவோர், தலையானவனாக இருப்பவனின் அடி தொடர்ந்து செல்லாவிடில் நீந்த முடியாமல் தவிக்க நேரிடும்.

# பொருளாதார மேம்பாட்டுக்கான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றாக விளங்கும் தாய்லாந்துடன் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க உடன்படிக்கை கடந்த சனியன்று கொழும்பில் கைச்சாத்தாகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தா தவீசின் ஆகியோர் முன்னிலையில் தாய்லாந்தின் பிரதிப் பிரதமரும் வர்த்தக அமைச்சருமான பூம்தம் வெச்சயச்சாயும் இலங்கையின் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவும் இந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்வில் பங்குபற்றிய தாய்லாந்து பிரதமர் இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின வைபவத்தில் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டார்.

இலங்கையும் தாய்லாந்தும் கையெழுத்திட்டிருக்கும் இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவும் வர்த்தக, பொருளாதார உறவுகளும் மேலும் மேம்பாடு அடையும்.

இலங்கையானது இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் ஏற்கனவே கையெழுத்திட்டிருக்கிறது. அந்த வகையில் தற்போது தாய்லாந்துடன் இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. தாய்லாந்தானது ஆசியான் அமைப்பில் அங்கம் வகிக்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாகும். 2021 இல் தாய்லாந்து நாட்டு நிறுவனங்கள் 17.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாடுகளில் முதலீடு செய்து ஆசியான் அமைப்பிலேயே மிகப்பெரிய முதலீட்டு நாடாகவும் விளங்கியது. அத்தோடு 2022 இல் ஆசியான் அமைப்பு நாடுகளில் இரண்டாவது பெரிய பொருளாதாரத்திற்கு உரிமை கொண்ட நாடாகவும் திகழ்ந்தது தாய்லாந்து.

மேலும் தாய்லாந்தானது இலங்கையைப் போன்று தேரவாத பௌத்த நாடுகளில் ஒன்றாகும். இந்த வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நட்புறவு மேலும் மேம்படவும் பொருளாதார வர்த்தக உறவுகள் வலுப்பெறவும் வழிவகுக்கும். அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்கவும் முடியாது.

தற்போது இலங்கையின் 37 ஆவது ஏற்றுமதி நாடாக தாய்லாந்து உள்ளது. இந்த உடன்படிக்கை இந்நிலையை மேலும் முன்னோக்கிக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. குறிப்பாக 2022 ஆம் ஆண்டில் 58.82 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருட்களை தாய்லாந்துக்கு இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது. அதேநேரம் 2005 முதல் 2022 காலப்பகுதியில் இலங்கையில் 92 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்ட நிதியை தாய்லாந்து நேரடி முதலீடாக மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் சந்தை ஊக்குவிப்புக்கான சாதக நிலைமையே தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான பிரதான நோக்கமாக அமைந்திருந்தது. இந்த ஒப்பந்தமானது, பொருட்கள் வர்த்தகம், வர்த்தக சட்ட அனுமதி, சுகாதார மற்றும் மூலிகை சுகாதார செயன்முறைகள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், வர்த்தகத் தீர்வுகள், சேவை வர்த்தகம், முதலீடுகள், சுங்கச் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை இலகுபடுத்தல், பொருளாதார ஒத்துழைப்பு, அறிவுசார் சொத்துக்களின் உரிமம், அடிப்படை ஏற்பாடுகள், நிறுவன மற்றும் இறுதி செய்யப்பட்ட ஒதுக்கீடுகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட துறைகளை உள்வாங்கும் வகையில் 14 அத்தியாயங்களுடன் கூடிய விரிவான 09 சுற்றுகளில் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையின் ஊடாக இருபக்க வர்த்தக உறவு இரு நாடுகளுக்கும் இடையில் மேலும் வளர்ச்சியடைவதோடு, பலமடையவும் செய்யும். இலங்கை 22 மில்லியன் சனத்தொகையைக் கொண்டுள்ள அதேநேரம், தாய்லாந்து 71.6 மில்லியன் மக்கள் தொகைமிக்க நாடாக விளங்குகிறது.

அதனால் இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இலங்கை நிச்சயம் அதிக நன்மைகள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி கட்டம்கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை அளிக்கும் வகையில் மறுமலர்ச்சிப் பாதையில் நாடு பிரவேசித்துள்ள சூழலில், இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. அதனால் இந்நாட்டின் உற்பத்திகளுக்கு தாய்லாந்தில் கிடைக்கப்பெறும் சந்தை வாய்ப்பு மேலும் அதிகரிக்கும். இதன் ஊடாக தாய்லாந்து நாட்டுக்கான ஏற்றுமதிகள் மூலம் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் அந்நியச் செலாவணியும் மேலும் அதிகரிக்கும். இது இந்நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பெரிதும் பங்களிக்கும் என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (03) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தா தவீசின் முன்னிலையில் நடைபெற்றது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் தாய்லாந்தின் பிரதிப் பிரதமரும் வர்த்தக அமைச்சருமான பூம்தம் வெச்சயச்சாய் மற்றும் இலங்கையின் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இலங்கை 22 மில்லியன் சனத்தொகையை கொண்டிருக்கும் அதேநேரம் இலங்கையின் 37 ஆவது ஏற்றுமதி நாடாக காணப்படும் தாய்லாந்து 71.6 மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருக்கிறது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதியான தேயிலை, மிளகு மற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுக்கான கட்டணத் தீர்வை வரியை தாய்லாந்து விதித்துள்ளது. இலங்கை 2022 ஆம் ஆண்டில் 58.82 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் 495 பில்லியன் அமெரிக்க டொலர் மொத்த தேசிய வருமானமாக ஈட்டிய ஆசியான் (ASEAN) நாடாக தாய்லாந்து காணப்படுகிறது.

தாய்லாந்து நாடுகள் 17.3 பில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த நிலையில், 2021 ஆம் ஆண்டில் ஆசியான் சங்கத்தில் மிகப்பெரிய முதலீட்டு நாடாகவும் தாய்லாந்து மாறியிருந்தது. 2005_ 2022 வரையான காலப்பகுதியில் இலங்கையில் தாய்லாந்து 92 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நேரடி முதலீடுகளை மேற்கொண்டிருக்கிறது.

2018 ஆம் ஆண்டில் 550 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட இருதரப்பு வர்த்தகப் பெறுமதியை 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் வரையில் மூன்று மடங்காக அதிகரித்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தமும் இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான முதன்மை சாத்தியமாகக் காணப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் பொருட்கள் வர்த்தகம், வர்த்தக சட்ட அனுமதி, சுகாதார மற்றும் மூலிகை சுகாதார செயன்முறைகள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், வர்த்தகத் தீர்வுகள், சேவை வர்த்தகம், முதலீடுகள், சுங்கச் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை இலகுபடுத்தல், பொருளாதார ஒத்துழைப்பு, அறிவுசார் சொத்துக்களின் உரிமம், அடிப்படை ஏற்பாடுகள், நிறுவன மற்றும் இறுதி செய்யப்பட்ட ஒதுக்கீடுகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட துறைகளை உள்வாங்கும் வகையில் 14 அத்தியாயங்களுடன் கூடிய விரிவான 09 சுற்றுகளில் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவை ஒப்பந்தமும் இங்கு கைச்சாத்திடப்பட்டது. 1950 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை வலுப்படுத்தும் வகையிலும், இந்த புதிய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவை உறவுகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்தும் வகையிலும் கையெழுத்தானது.





## இரத்தினக்கல் ஆபரணங்கள் துறை மற்றும் விமான சேவைகள் தொடர்பிலான ஒப்பந்தங்களிலும் கைச்சாத்து

இலங்கை தரப்பில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் தாய்லாந்திற்கான பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜக்கபொங் சங்மானி(Jakkapong Sangmanee) ஆகியோர் இதில் கைச்சாத்திட்டனர்.

இலங்கை இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI) மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் ஆபரண நிறுவனம் (GIT) ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இதன் பின்னர் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் மிக உயர்தர இரத்தினக்கற்கள் சர்வதேச ரீதியில் நன்கு பிரபல்யமானவை என்பதுடன் தற்போது சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ள தாய்லாந்து, அந்த ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுள்ளது.

அதன்படி, இரு நாடுகளிலும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இரத்தினம் மற்றும் ஆபரணத் துறை தொடர்பான அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுகிறது.





இலங்கை இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் பி.ஜி.ஆர்.டபிள்யூ. கம்லத் மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் ஆபரண நிறுவனப் பணிப்பாளர் சுமேத் பிரசோங்பொஞ்சாய் (Sumed Prasongpongchai) ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# வானொலி நேயர்களை தனது மதுரக்குரலால் வசீகரப்படுத்திய கலைஞர் கற்பிட்டி ஜப்பார்



லியாவுல் பன்னான் கலைச்சுடர் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் ஒரு காலத்தில் தன் மதுரக்குரலால் வானொலி நேயர்களைக் கட்டிபோட்டவர். 60, 70, 80 களில் இவரது தொனியில் தம் மனதை பறிகொடுக்காதவர் யாருமே இருக்க மாட்டார்கள்.

முதுபெரும் கலைஞர், கவிஞர், நாடக எழுத்தாளர், பாடலாசிரியர், தமிழகத்து பேச்சாளர்களோடு ஒப்பிட்டு பேசும் பன்முக ஆளுமை மிக்க கற்பிட்டி ஜப்பார் அவர்களைப் பற்றி இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்திருக்க நியாயமில்லை.

நாளை 6 ஆம் திகதி இரவு 8.10 மணியளவில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் எமது 'பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடர்' ஜப்பார் பற்றி விரிவாகப் பேசப்போகிறது.

மர்ஹூம் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் அவர்களது நினைவுகளை அவரது நெருங்கிய நண்பர், பேராசிரியர், ஆய்வாளர் முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எஸ்.எம். அனஸ் அதிதியாக கலந்து நேயர்களோடு பரிமாறிக் கொள்கிறார்.

கிராம அதிகாரி சேகு இஸ்மாயீல் மரைக்கார், உம்மு ஹபீபா தம்பதியரின் மூத்த புதல்வராக அவர் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கற்பிட்டி அல் அக்ஸா மகாவித்தியாலயத்தில் கற்றார். உயர்கல்வியை சிலாபம் சென். மேரிஸ் கல்லூரியில் தொடர்ந்தார். ஸைனப் ஜப்பாரை (ஓய்வுநிலை ஆசிரியர்) மணமுடித்த இவருக்கு மூன்று ஆண்களும், மூன்று பெண்களுமாக ஆறு பிள்ளைகள்.



அதன் ஒரு பாத்திரமாய் கர்ஜித்து தன் வானொலி நாடகங்கள் மூலமாக சமூக மாற்றத்தை அவர் ஏற்படுத்தினார். குறிப்பாக புத்தளம், கற்பிட்டி வட்டார பாரம்பரியத்தை, அப்பிரதேச வாழ் அடிமட்ட மனிதர்களின், மீனவர்கள்_ முதலாளியினரின் முரண்பாடுகளை மையப்படுத்தி எழுதிய ஒவ்வொரு முஸ்லிம் சேவையின் நாடகமும் இவரது பெயரை பேசவைத்தன.

## முஸ்லிம் சேவையில் நாளை பேராசிரியர் அனஸ் வழங்கப் போகும் தகவல்கள்

முஸ்லிம் சேவைக்கு இவர் குரலால், எழுத்துகளால், கருத்துகளால் வழங்கிய பங்களிப்புகள் அநேகம். அழகு தமிழில் எழுதி, தனக்கே சொந்தமான குரல் ஜாலத்தில் நடித்த நாடகங்களை, இசை, உரைச் சித்திரங்களை, இஸ்லாமிய நற்சிந்தனைகளில் ஒலித்த அந்த சிம்மக் குரலை யார்தான் மறந்து போவர்?

பலதரப்பட்ட நிஜ மனிதர்களை தன் நாடகத்தில் கற்பனைப் பாத்திரங்களாக உலவவிட்டு,

'அவன் போட்ட கணக்கு', 'முடிந்த முடிவு', 'அவள் கொடுத்த தீர்ப்பு', 'பெற்றவளா? தொட்டவளா?' ஆகியவை நாடகங்களுக்கு அவர் போட்ட தலைப்புகளாகும். இவரது நாடகங்களில் நடிப்பதற்காக மூத்த கலைஞர்கள் முன்னிற்பர்.

இசையறிவும் மிக்க எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார், ஒரு பாடலாசிரியருமாவார். இசைச்சித்திரங்களுக்கு பாடல்கள் எழுதியதோடு பொதுவான



தனது மனைவியுடன் மர்ஹூம் ஜப்பார்

இஸ்லாமிய கீதங்கள் பல எழுதியுள்ளார். சிரேஷ்ட பாடகர்களான பீர் முஹம்மது, டொனி ஹசன், குமாலா சௌஜா எம்.எச். பௌசுல் அமீர், மஸாஹிரா இல்யாஸ் போன்றோர் பாடியிருக்கிறார்கள். அன்று ஒலிபரப்பான மாதர் நிகழ்ச்சிக்கு பெண் எழுத்தாளர்கள் எழுத பின்வாங்கிய சூழலில் மாதர் சிந்தனைக்கு வலுவூட்ட வல்ல ஆக்கங்களை தன் துணைவியார் திருமதி சைனப் ஜப்பாரது பெயரில் எழுதி நிகழ்ச்சித் தொடர துணைசேர்த்துள்ளார். நாளைய நிகழ்ச்சியை முஸ்லிம் சேவை அதிகாரி எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

1934 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி கற்பிட்டியில் பிறந்த கலைச்சுடர் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார், 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி தனது எழுபதாவது வயதில் காலமானார். அவரது ஜனாஸா கற்பிட்டி பெரியபள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**எம்.எஸ்.எம். ஜின்னா...**

# எம்.ஜி.ஆர் முதல் விஜய் வரை தமிழகத்தில் அரசியலில் குதித்த சினிமா பிரபலங்கள்

இந்திய நடிகர்கள் பலரும் மக்கள் மத்தியில் நல்ல ஒரு பிரபலத்தை பெற்ற பிறகு அரசியலில் இணைந்து அல்லது தங்களுக்கென தனிக்கட்சியை ஆரம்பித்து மக்களுக்காக சேவை செய்ய முயற்சிகள் செய்கிறார்கள்.

எம்.ஜி.ஆர் பல படங்களில் நடித்து மக்கள் மனதை வென்றார். 1977 இல் அ.தி.மு.க கட்சியை தொடங்கி தமிழ்நாட்டின் முதல்வராக அமர்ந்தார். தனது கடைசி மூச்சு வரை முதல்வராகவே இருந்தார்.

ஜெயலலிதா நடிகையாக பல படங்களில் நடித்துள்ளார். இவர் எம்.ஜி.ஆர் உடன் இணைந்து பல படங்களில் நடித்தாலும் கட்சிப் பணியிலும் இணைந்து இருந்தார். அவரது மறைவுக்கு பின் கட்சியை பெரிய கட்சியாக மாற்றி ஆறுமுறை முதல்வராக அமர்ந்தார்.

சிவாஜி கணேசன் நடிப்பால் பல விருதுகளைப் பெற்றுள்ளார். நடிப்பால் பிரபலமான இவர் கட்சி தொடங்கி போட்டியும் இட்டார். ஆனால் அவரால் சினிமாவால் எடுத்த பெயரை அரசியலில் எடுக்க முடியவில்லை.

நகைச்சுவை நடிகரான கருணாஸ் சாதி கட்சி ஒன்றை ஆரம்பித்தார். இவர் சட்டமன்ற உறுப்பினராக அ.தி.மு.க கட்சியில் இருந்து போட்டியிட்டு வென்றார்.

கமல்ஹாசன் மக்கள் நீதி மையம் என்ற கட்சியைத் தொடங்கி சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.







அகில இந்திய சமத்துவ கட்சி என்ற பெயரில் நடிகர் சரத்குமார் கட்சி ஆரம்பித்தார். இவர் தென்காசி தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். தற்போது படங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

இயக்குனர், நடிகர் என சீமான் தமிழ் சினிமாவில் பிரபலமானார். அவர் நாம் தமிழ் கட்சி என்ற பெயரில் கட்சியை ஆரம்பித்து தனிக்கட்சியாக வலம்வந்து கொண்டிருக்கிறார்.

விஜயகாந்த் ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிட்டு அவருக்கு எதிராக சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவராக தூள் கிளப்பினார். மக்களுக்கு இவர் பல நல்ல செயல்களை செய்துள்ளார் என்பதால், இன்றும் போற்றப்படுகிறார்.

இயக்குனர், இசையமைப்பாளர், நடிகர் என தனக்கென்று தனி இடத்தை உருவாக்கியவர் டி. ராஜேந்தர். இவர் லட்சிய தி.மு.க என்ற கட்சியை தொடங்கினார். ஆனால் இதுவரையில் எங்கும் போட்டியிடவில்லை.



நடிகர் கார்த்திக் மனித உரிமை காக்கும் கட்சி என்ற பெயரில் கட்சியைத் தொடங்கினர். பின்னர் அதை எந்தவித செயலிலும் ஈடுபடாமல் விட்டுவிட்டார்.

இயக்குனர், நடிகர் என பல பரிமாணங்களில் ஜொலித்தவர் கே. பாக்யராஜ். அவர் எம்.ஜி.ஆர் பெயரில் கட்சி ஆரம்பித்தார். ஆனால் அவரை மக்கள் அரசியல்வாதியாக ஏற்றுக் கொள்ளவில்லை. நடிகர் விஜய் தனது சினிமா வாழ்க்கையில் முன்னனி நடிகராக வலம் வந்து கொண்டிருக்கும் நிலையில் தற்போது 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற பெயரில் கட்சியைத் தொடங்கியுள்ளார்.

# மானுடவியல்



பின்பு தந்தையார் ஸ்நானம் பண்ணும் பொழுது, பிள்ளையார் அவரைக் காணாது இறையளவாயினுந் தரியார் என்னும் நிலைமை தலைக்கீடாக, பரமசிவனுடைய திருவடிகளை வழிபட்ட முன்னுணர்ச்சி மூள கரையினின்று கண்களைக் கண்ணீர் ததும்பும்படி கைகளினாலே பிசைந்து அதரந்துடிக்க, எவ்வுலகங்களும் குதூகலிக்க, பொருமி அழுதார். தம்முடைய முற்சார்பை அறிந்தோ, பிள்ளைமையானோ, சுவாமியுடைய திருத்தோணிச்சிகரத்தைப் பார்த்து, "அம்மே, அப்பா" என்று அழைத்தழைத்து அழுதார், அப்பொழுது சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய தோணியப்பர் அவருடைய முற்றிருத்தொண்டை நினைந்து, அவருக்கு அருள் செய்தற்குத் திருவுளங்கொண்டு பார்வதிதேவியாரோடும் இடபாரூடராய் எழுந்தருளி,

151

தீர்த்தக்கரையை அடைந்து உலகமாதாவாகிய உமாதேவியாரை நோக்கி, "உன்னுடைய முலைப்பாலைப் பொன் வள்ளத்திலே கறந்து இவனுக்கு ஊட்டு" என்று அருளிச் செய்தார். பரிபக்குவர்களாகிய ஆன்மாக்களிடத்திலே சகசமாயுள்ள மலத்தை நீக்கி அவர்களைச் சிவத்தோடு இரண்டறக் கலப்பித்தருளும் பராசத்தியாகிய உமாதேவியார் சென்றணைந்து, தம்முடைய திருமுலைப்பாலப் பொன்வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தைக் குழைத்து, பிள்ளையாருடைய கண்ணீரைத் துடைத்து, கையிலே கொடுத்து ஊட்ட, சிவபெருமான் அழுகை தீர்த்து அநுக்கிரகஞ் செய்தருளினார்.

அப்பிள்ளையார் சர்வான்மாக்களுக்கும் பரமபிதாமாதாக்களாகிய சிவன் சக்தி இருவராலும் ஆளப்பட்ட மையினாலே ஆளுடைய பிள்ளையார் என்னும் பெயரும், அரிபிரமேந்திராதிதேவர்களுக்கும் முனிவர்களுக்கும் எட்டாத சிவஞானத்தோடு சம்பந்தஞ்செய்தலினாலே திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் பெயரும் உடையராயினார்.



சிவபாதவிருதயர் சிறிதுபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக் கொண்டு கரையிலேறி, பரஞானக் கண்ணினாலே சிவத்தைத் தரிசித்து அதில் அதீதப்பட்டு நின்ற ஆளுடைய பிள்ளையாரை நோக்கி, "நீ யார் தந்த பாலை உண்டாய்" என்று கோபித்து,

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தை அமாவாசை

அமாவாசையன்று உலகை இயக்கும் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்வதால் ஒரு காந்த சக்தி ஏற்படுகிறது. அமாவாசையன்று பிறக்கும் குழந்தைகளின் மூளை பிற்காலத்தில் அதீதமாக வேலை செய்யும். இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அமாவாசையில் பிறந்தவர்கள் புத்தி மிகவும் கூர்மையாக செயல்புரியும் ஆகையால் அவர்கள் அறிவை சரியான முறையில் செயற்படுத்தினால் மிக உயர்ந்த இடத்திற்கு செல்ல முடியும். அமாவாசையன்று விபத்துகள் கூடுதலாக ஏற்படுவதாக ரஷ்ய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அமாவாசைப் பிறந்த அனேகருக்கு தலையில் இரண்டு சுழி இருப்பதாக கூறப்படுகிறது. முன்னோர் வழிபாட்டுக்கு மிகவும் சிறந்த நாள் அமாவாசை! இது அனைத்து மதத்திற்கும் பொருந்தும். சூரியனும், சந்திரனும் ஒரே ராசியில் இணைவது அமாவாசை திதியாகும். அமாவாசை தோறும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பவர்களின் குடும்பம் அமைதி பெற்று, மென்மேலும் சிறந்து விளங்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. முன்னோர்கள் இறந்த திகதி தெரியாதவர்கள் ஆடி அமாவாசை, தை அமாவாசை, மகாளய அமாவாசை தினங்களில் திதி, தர்ப்பணம் கொடுப்பது உகந்தது.



பெற்றோர் உயிருடன் வாழ்ந்தபோது, அவர்களை கவனிக்காததால், அவர்கள் அடையும் துன்பங்கள் யாவும், பாவத்தின் வடிவில் கவனிக்கத் தவறியவர்களை சேர்வதாக கூறப்படுகிறது. பாவங்களில் பெரிய பாவம் பித்ருக்களின் கர்மாவை நிறைவேற்றாமல் இருப்பதுதான். நம்மை பெற்ற தாய், தந்தை, தாத்தா, பாட்டிகள் தான் 'பித்ரு'க்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பித்ருக்கள் மரணம் அடைந்த பிறகு 'பித்ரு லோகம்' சென்றடைகின்றனர். அவர்களின் ஆன்மா சாந்தியடைய, அவர்களுக்கு மறக்காமல் தர்ப்பண காரியங்களை நிறைவேற்ற வேண்டும். இதனால் அவர்கள் மகிழ்ச்சியுடன் சந்ததியினரை ஆசீர்வாதம் செய்வார்கள். தங்களின் சந்ததியருக்கு தேவையான பல உதவிகளை செய்வதுடன், அவர்களுக்கு வரும் கெடுதல்களை தடுத்து நிறுத்துவார்கள். ஒருவன் தனது மறைந்த தாய், தந்தைக்கு சிரார்த்தம் செய்யாமல், எனக்கு செய்யும் பூஜைகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை' என்று விஷ்ணு பகவான் கூறுவதில் இருந்தே இதன் முக்கியத்துவத்தை நாம் அறியலாம்.



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அறநெறிப்பாடசாலை ஆசிரியருக்கான பாடத்திட்டம் தொடர்பான கருத்தரங்கு இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனனின் வழிகாட்டலில் நடைபெற்று வருகிறது. கொழும்பு, கம்பஹா அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான கருத்தரங்கானது திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இங்கு வளவாளராக அம்பாறை மாவட்ட செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜ் கலந்து கொண்டார்.

# சைவ மஞ்சரி

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 74



துன்பம் வந்ததும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.

வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது.

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*19533) முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கப்படுபவர் யார்?*
**"சுவாமி விபுலானந்தர்"**

*19534) "சுவாமி விபுலானந்தர்" ஏன் முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கப்படுகிறார்?*
**தமிழுக்கு தொண்டாற்றியவர்களில் மிகவும் முக்கியமானவர் என்பதாலாகும்.**

*19535) இவர் என்னென்ன பதவிகளை வகித்து தமிழுக்குத் தொண்டாற்றியிருக்கிறார்?*
**ஆசிரியராக, தமிழ் பண்டிதராக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக**

*19536) இவர் எந்தத்துறை பட்டதாரி?*
**விஞ்ஞான பட்டதாரி**

*19537) இவர் எங்கு பிறந்தார்?*
**இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் காரைதீவு எனும் ஊரில்**

*19538) இவர் எப்போது பிறந்தார்?*
**1892 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 27 ஆம் திகதி.**

*19539) இவரது தந்தையாரின் பெயர் என்ன?*
**சாமித்தம்பி**

*19540) தாயின் பெயர் என்ன?* **கண்ணம்மா**

*19541) இவரது இயற்பெயர் என்ன?*
**மயில்வாகனன்**

*19542) இவர், ஆரம்பக் கல்வியை எங்கு பயின்றார்?*
**கல்முனை மெதடிஸ் கல்லூரியில் கற்றார்.**

*19543) மட்டக்களப்பு மைக்கல் கல்லூரியில் இவர் என்ன செய்தார்?*
**ஆசிரியராக பணியாற்றினார்**

*19544) இவர் விஞ்ஞானம் பயின்றது எங்கே?*
**கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில்**

*19545) இவர் எத்தனையாம் ஆண்டு கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்றார்?* **1912 இல்**

*19546) இவர் எத்தனையாம் ஆண்டு பட்டம் பெற்றார்?* **1916 இல்**

*19547) இவர் எந்தத்துறையில் பட்டம் பெற்றார்?*
**அறிவியலில்**

*19548) இவர் ஒரு தமிழ் ஆசிரியராக எந்த கல்லூரியில் தனது கல்விப்பணியை துவங்கினார்?*
**மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரியில்**

*19549) இவர் பின்பு என்ன செய்தார்?*
**விரிவுரையாளராக பணியாற்றினார்.**

*19550) எங்கு விரிவுரையாளராக பணியாற்றினார் ?*
**கொழும்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில்**



*19551) இவர் பண்டிதர் பட்டம் பெற்றது எங்கு?*
**மதுரையில்**

*19552) மதுரை தமிழ்ச் சங்கம் நடாத்திய தேர்வில் சித்தி பெற்றதால் இவருக்கு கிடைத்த பட்டம் என்ன?*
**பண்டிதர்**

*19553) இவர், இலங்கையில் இருந்து இந்த பட்டத்தை பெற்றுக்கொண்ட எத்தனையாவது நபர்?*
**முதல் நபர்**

*19554) துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலானந்தர் ஆக்கியது எது?*
**யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளினுடைய பழக்கம்**

*19555) ஆச்சிரம வாழ்க்கை முடிந்ததும் என்ன பட்டத்தைப் பெற்றார்.*
**சுவாமி விபுலானந்தர் எனும் குரு பட்டத்தை**

*19556) சுவாமி விபுலானந்தர் எனும் குரு பட்டத்தை யாரிடம் பெற்றார்?*
**இராமகிருஸ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தரிடம் இருந்து பெற்று கொண்டார்.**

*19557) அதனால் அவர் என்ன பெயரைப் பெற்றார்?*
**"பிரபோத சைதன்யர்" என்ற பெயரை**

*19558) இவர் செய்த சேவை என்ன?*
**அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி கலாச்சாரத்தில் இருந்த வீழ்ச்சியில் இருந்த தமிழ் சமூகத்தை இவர் தட்டி எழுப்பினார்.**

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கொடியேற்றம்











மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவ கொடியேற்றத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார் , மாத்தளை சுழற்சி நிருபர் பதுர்தீன்)




சென்னையில் உள்ள இலங்கைத் துணை உயர் ஸ்தானிகராலயம் அதன் துணைத்துாதுவர் துரைசாமி வெங்கடேஷ்வரனின் தலைமையில் இலங்கையின் 76வது சுதந்திர தினத்தை நேற்று சான்சரி வளாகத்தில் கொண்டாடியது.

## பாடசாலைகள்...

இருப்பினும், உயர்தர விவசாய விஞ்ஞானப் பாட பரீட்சை வினாத்தாள் வெளியானதை அடுத்து வினாத்தாளை இரத்து செய்த பரீட்சைத் திணைக்களம், மீண்டும் அந்த பரீட்சையை கடந்த முதலாம் திகதி நடத்தியது.

## யாழில். தேசிய...

இந்தப் பேரணி, வைத்தியசாலை வீதியூடாக வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தது. நடை பவனி, மோட்டார் சைக்கிள் பவனி, முச்சக்கரவண்டி பவனியுடன் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு பெருந்திரளானோர் பேரணியில் கலந்துகொண்டனர். இப் பேரணியை யாழ். சிவில் அமைப்பின் செயற்பாட்டாளர் அருண் சித்தார்த் ஏற்பாடு செய்திருந்தார்.

## 76 ஆவது சுதந்திர தின...

பாதுகாப்புப் படை மற்றும் தேசிய கெடட் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு அணிவகுப்பில் பங்கேற்றனர்.

இதில் முப்படைகள் கவச வாகனங்கள் மற்றும் அணிவகுப்புகளும் அடங்குவதோடு 22 ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் 29 அங்கவீனமுற்ற அதிகாரிகள் அணிவகுப்பில் கலந்து கொண்டதோடு முப்படை வாத்தியக் குழுவும் அதில் இணைந்து கொண்டது.

அணிவகுப்பு ஊர்வலம் நிறைவடையும் வரை விசேட பீடத்தில் நின்றிருந்த ஜனாதிபதி, அங்கு பயணித்த அனைத்து படைவீரர்களுக்கும் மரியாதை செலுத்தியமை விசேட அம்சமாகும்.

அத்துடன் இலங்கையின் வான் பலத்தை வெளிப்படுத்தும் வகையில், கபீர் விமானங்கள் உள்ளிட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களின் சாகசங்கள் நிகழ்வை அலங்கரித்தது. பரசூட் நிகழ்ச்சிகளும் விழாவுக்கு வர்ணம் சேர்த்தன.

வெளிநாட்டுத் தலைவர்கள் வாழ்த்து

இதற்கிடையில்,76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ், பிரித்தானிய மூன்றாவது சார்ள்ஸ் மன்னர், ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தென் கொரியா ஜனாதிபதி யுன் சுக் சுக் யெஓல், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, லிபிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் ஒய் அல் மென்பி, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினம், அவுஸ்திரேலிய ஆளுநர் ஜெனரல் டேவிட் ஹர்லி ஆகியோரும் பாகிஸ்தான் ஜனாதிபதி, பங்களாதேஷ் ஜனாதிபதி, குவைத் அமீர் உள்ளிட்ட அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசாங்கத்துக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

## பொருளாதார உறவுகள்...

தாய்லாந்து வர்த்தக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தாய்லாந்து பிரதமர் தலைமையிலான குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவேற்றதோடு தாய்லாந்தின் உணவு, உணவு தயாரிப்பு, சுகாதாரம், எரிசக்தி, விருந்தோம்பல், சுற்றுலா, மீன்பிடி, விவசாயம் மற்றும் உற்பத்தித் துறை என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல முன்னணி நிறுவனங்களின் வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆசியான் நாடுடன் கைச்சாத்திடப்பட்ட இரண்டாவது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாக இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) கைச்சாத்திடப்படுவதாக குறிப்பிட்டார்.

சுபோதாய் இராச்சிய காலத்துக்கு முன்பே இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான வரலாற்று வர்த்தக உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இராமாயணம் மற்றும் தேரவாத பௌத்தம் போன்ற பாரம்பரியங்கள் உட்பட இரு நாடுகளுக்கிடையிலான கலாச்சார உறவுகளையும் நினைவுகூர்ந்தார்.

இலங்கை துறைமுகங்களை ஆசிய பசுபிக் பிராந்தியத்துடன் இணைக்கும் கிராஹ் கால்வாயில் (Krah Canal) நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தரைப் பாலம் தொடர்பில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்திய ஜனாதிபதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையின் நவீனமயமாக்கல் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் கலந்துரையாடினார்.

இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்துக்காக தாய்லாந்து பிரதமரின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக நோக்கிலான துரியன் பயிர்ச்செய்கை திட்டத்தையும் ஜனாதிபதி பாராட்டினார். மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் சுற்றுலாத்துறைக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை வழங்கும் திட்டங்களுடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கிடைத்துள்ள புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி பரஸ்பர நன்மைகளை அடைய இரு நாடுகளின் வர்த்தக சமூகமும் ஒன்றிணைந்து செயற்படுமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் துறையில் இலங்கையில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கருத்துத் தெரிவித்த தாய்லாந்து பிரதமர், அது தொடர்பான திறன்களை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளுக்கும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான வாய்ப்பு தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையிலான வரலாற்று கலாச்சார மற்றும் மத உறவுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தாய்லாந்து பிரதமர், தாய்லாந்து சர்வதேச விமானச் சேவை மார்ச் 31 முதல் பெங்கொக் மற்றும் கொழும்பு இடையே தினசரி விமான சேவையை மீண்டும் தொடங்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் எரிசக்தி துறைகளில் முதலீடு செய்வதற்கு தாய்லாந்து நிறுவனங்களை பிரதமர் ஊக்குவித்தார்.

## அமைச்சர் கெஹெலிய...

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல கடந்த இரு தினங்களுக்கு முன் சிஐடியினரால் கைது செய்யப்பட்டதையடுத்து எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கடந்த 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, 3ஆம் திகதி மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றம் அவருக்கு விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்தது.

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோப்லின் மருந்து தொடர்பான வழக்கு சம்பந்தமாக தற்போதைய சுற்றாடல் அமைச்சரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் 10 மணி நேரத்திற்கும் மேலாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்த நிலையில் அதனையடுத்து மேற்படி அதிகாரிகளினால் அமைச்சர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவ்வாறு தரமற்ற மருந்தை இறக்குமதி செய்து பகிர்ந்தளித்ததன் மூலம் அரசாங்கத்திற்கு பல கோடி ரூபாய்களை நட்டம் ஏற்படுத்தியிருந்தார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு...

கடல் வழியாக பாம்பன் கடற்கரைக்கு தங்கக்கட்டிகள் கடத்தி வரப்படவுள்ளதாக திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (03) காலை திருச்சியிலிருந்து சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினர் இரண்டு குழுக்களாக பிரிந்து பாம்பன் மண்டபம் முந்தல் முனை மற்றும் குந்துகால் உள்ளிட்ட பகுதிகளில் சோதனை மேற்கொண்டனர். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த நபரை நிறுத்திய போது தப்பி ஓடியுள்ளார். இதனையடுத்து சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் அவரை விரட்டி பிடித்தனர். அவரது வண்டியை சோதனை செய்த போது சுமார் 4.634 கிராம் எடையுள்ள தங்க கட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கடத்தல் தங்கத்தையும், இராமேஸ்வரம் நம்புராஜன் என்பவரை கைது செய்து இராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு கொண்டு வந்தனர். கைது செய்யப்பட்ட நம்புராஜனிடம் விசாரணை நடத்தி பின் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் இந்திய மதிப்பு சுமார் மூன்று கோடி ரூபாய் என அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டது. இலங்கை ரூபாவில் சுமார் 11 கோடி 28 இலட்சம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் குறிப்பாக தனுஷ்கோடி அரிச்சல்முனை இராமேஸ்வரம், பாம்பன், குந்துகால் முந்தல் முனை, வேதாளை உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக கடத்தல் தங்கம் போதைப்பொருள்களென கைப்பற்றப்பட்டு வருவது மீனவர்கள் மத்தியிலும் மீனவக் கிராம மக்களிடையே இப்பகுதிகள் கடத்தல் கூடாரமாக மாறி வரும் சூழல் உருவாகி வருவதாக அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 211 இராணுவ அதிகாரிகள்...

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த தரமுயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இரண்டு பிரிகேடியர்கள் , மேஜர் ஜெனரல்களாகவும், 2 கேர்ணல்கள் பிரிகேடியர்களாகவும், 13 லெப்டினன்ட் கேர்ணல்கள் கேர்ணல்களாகவும், 17 மேஜர்கள் லெப்டினன்ட் கேர்ணல்களாகவும், 29 கெப்டன்கள் மேஜர்களாகவும், 13 லெப்டினன்ட்கள் கெப்டன்களாகவும், 125 இரண்டாம் லெப்டினன்ட்கள் லெப்டின்ட்களாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர். இதேவேளை, இராணுவ வீரர்களில் வொரண்ட் அதிகாரி –II நிலையிலிருந்து வொரண்ட் அதிகாரி I நிலைக்கு 49 பேரும், வொரண்ட் அதிகாரி –II நிலைக்கு 111 பணிநிலை சார்ஜென்களும், பணிநிலை சார்ஜென் நிலைக்கு 135 சார்ஜென்ட்களும், 170 கோப்ரல்கள் சார்ஜென் நிலைக்கும், 364 லான்ஸ் கோப்ரல்கள் கோப்ரல் நிலைக்கும் மற்றும் 330 வீரர்கள் லான்ஸ் கோப்ரல் நிலைக்குமே இவ்வாறு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் இரண்டு நட்சத்திர மேஜர் ஜெனரல் நிலைக்கு சிரேஷ்ட பிரிகேடியர்களான மேஜர் ஜெனரல் பீஎன் கொடல்லவத்த மற்றும் மேஜர் ஜெனரல் யூஎல் ஜேஎஸ் பெரேரா ஆகியோர் அடங்குவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்தார்.

## கொள்ளுப்பிட்டி, கொம்பெனி வீதி...

பெரஹெர மாவத்தை மற்றும் நவம் மாவத்தை ஆகிய வீதிகள் இன்று முதல் சில கட்டங்களாக மூடப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீதிகளை அண்மித்த பகுதிகளில் நிலத்தடி குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மாநகர பொறியியலாளர்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இன்று முதல் எதிர்வரும்19 ஆம் திகதி வரை உத்தரானந்த மாவத்தை, நவம் மாவத்தையிலிருந்து ரயில் கடவை வரையான வீதிப் பகுதி மூடப்படவுள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் மார்ச் 04 ஆம் திகதி வரை உத்தரானந்த மாவத்தையிலி ருந்து பெரஹெர மாவத்தை முதல் நவம் மாவத்தை வரையிலான பகுதிகள் மூடப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூன்றாம் கட்டமாக மார்ச் 5 ஆம் திகதி முதல் மார்ச் 11 ஆம் திகதி வரை உத்தரானந்த மாவத்தையிலிருந்து பெரஹெர மாவத்தைக்கு அருகிலுள்ள ரொட்டுண்டா கார்டன் சந்தி பகுதி வரையான வீதி மூடப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கல்வித்துறை, தொழில்நுட்பத்துறைக்கு...

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பேராசிரியர் சிவா சிவநாதன் நாளைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து யாழ். இந்துக் கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தர கல்லூரிக்கும் ஸ்மார்ட் வகுப்பறை மற்றும் ஸ்மார்ட் போர்ட் என்பவற்றுக்கான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கவுள்ளார். இந்நிகழ்வுகளில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் கலந்து கொள்ளவுள்ளார்.

இலங்கையில் பாடசாலை கல்வி மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''ஸ்டீம்' கல்வி முறைமை மேலும் விரிவுப்படுத்துவதற்கும் அதனை ஊக்கப்படுத்துவதற்கும் கல்வியமைச்சரின் கோரிக்கைக்கு அமைய பேராசிரியர் சிவா சிவநாதன் தனது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளார்.

கல்வி அமைச்சருடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் பேராதனை பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம், விலங்கு, கால்நடை சத்திரசிகிச்சை உள்ளிட்ட துறைகளில் முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் இரு பல்கலைக்கழகங்களுக்கிடையில் தகவல் மற்றும் தொழில்னுட்ப திறன்களை பரிமாற்றிக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வியமைச்சின் கோரிக்கைக்கு அமைய இலங்கையின் கல்வி, உயர் கல்வி, திறனபிவிருத்தி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்காக கலாநிதி சிவா சிவநாதன் எதிர்வரும் காலங்களில் பல செயற்திட்டங்களை தேசிய மட்டத்தில் முன்னெடுக்கவுள்ளார்.

சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை சிறந்த நாடு என்பதை குறிப்பிட்ட அவர், திட்டமிட்ட செயற்திட்டங்கள் மூலம் நாட்டை உலகின் முன்னணி நாடாக கட்டியெழுப்ப முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்ப ரீதியில் எதிர்கால சந்ததியை முன்னேற்றும் செயற் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வடக்கில் பிறந்து அமெரிக்காவில் தற்போது புகழ்பெற்ற விஞ்ஞானியாகவும் பல்கலைக்கழகம் ஒன்றின் ஸ்தாபகராகவும் விளங்கும் பேராசிரியர் சிவா சிவநாதன், வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டு வடக்கிலுள்ள பாடசாலைகளின் நிலைமைகளை அவதானித்துள்ளதாக குறிப்பிட்டதுடன் வடக்கில் போதைப் பொருள் கலாசாரத்தை இல்லாதொழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார்.

அது தொடர்பில் வடக்கிலுள்ள கல்லூரிகளின் அதிபர்களுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர் இலங்கையின் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

கல்வி பொது தராதர சாதாரண தரத்திற்குப் பின்னரான இரண்டு வருடங்கள் மற்றும் உயர்தரத்திற்கு பின்னர் பல்கலைக்கழகம் செல்லும் வரையிலான இரண்டு வருடங்கள் என நான்கு வருடங்கள் மாணவர்களின் வாழ்க்கையில் வீணடிக்கப்படுவதை சுட்டிக்காட்டிய அவர் அதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அது தொடர்பில் கல்வியமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இன்றைய பலன்கள்

(05.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
வாழ்க்கைத் துணையின் கல்விக்கு ஏற்ற தொழில் முயற்சி செய்திருந்தால் அது கிடைக்கும். உதிரி வருமானங்கள் உண்டு.

**ரிஷபம் :**
குறைந்த விலைக்கு வாங்கி போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று பெரும் தொகை கைகளில் புரளும் சந்தர்ப்பம் உண்டு.

**மிதுனம்:**
பழைய வாகனங்களின் பழுதுச் செலவு காரணமாக புதிய வாகனம் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:**
உத்தியோகத்தில் ஏற்பட்ட தொய்வு அகலும். பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு பக்க பலமாக இருந்து உதவுவர்.

**சிம்மம்:**
உத்தியோக ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புனித பயணங்கள் அதிகரிக்கும். ஒற்றுமை பலப்படும்.

**கன்னி:**
தாய் வழி ஆதரவு திருப்திப்படுத்தும். செல்வாக்கு பெற்ற நண்பர்கள் மூலம் உங்கள் செயல்பாடுகளில் இருந்த தடைகளை அகற்றி கொள்வீர்கள்.

**துலாம்:**
மன உறுதி கூடுதலாக காணப்படும். நீங்கள் தேர்ந்தெடுத்த களம் எதுவாக இருந்தாலும் அதில் முன்னேற்றம் கிட்டும்.

**விருச்சிகம்:**
ஆடை ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். திருமண சுப காரியங்கள் நடைபெற வழி பிறக்கும்.

**தனுசு:**
தொழில் ரீதியாக திடீர் மாற்றங்கள் ஏற்படும். வீண்பழிக்கு ஆளாக நேரிடும். முன்னேற்ற பாதையில் ஒரு சில குறுக்கீடுகள் வந்து சேரும்.

**மகரம்:**
தன்னம்பிக்கையும் தைரியமும் கை கொடுக்கும். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களால் சில பிரச்சனைகள் உருவாகலாம்.

**கும்பம்:**
இதுவரை கடின முயற்சி செய்தும் இலகுவாக முடிவடையாத காரியங்கள் இப்பொழுது எளிதில் முடிவடையும்.

**மீனம்:**
பணிபுரியும் இடத்தில் அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்.

## இலங்கை தாய்லாந்து ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆசியான் நாடொன்றுடன் கைசாத்திடும் இரண்டாவது சுதந்திர வர்த்தக ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் இரு நாட்டு அரசுகளும் அர்ப்பணிப்புடனும் திறம்படவும் செயல்பட்டன. இரு நாடுகளினதும் பொருளாதார ஒத்துழைப்பின் மைல்கல்லாகவும் இதனை கூறலாம். சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தும் வகையில் விமான சேவை ஒப்பந்தமும் புதுப்பிக்கப்பட்டது. இலங்கை இரத்தினக் கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது. இந்த இரண்டு ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளையும் மேம்படுத்த உதவும்.

இலங்கை தாய்லாந்து உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கான வலுவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம். இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்துவதற்கான பெருமளவான விடயங்கள் பற்றி அறியப்பட்டதோடு, இரு நாடுகளுக்கு இடையில் சுற்றுலா, வர்த்தகம் மற்றும் ஏனைய பொருளாதார ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு உரையாற்றிய தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் (Srettha Thavisin),

"இந்த நேரத்தில், ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கு எனது மிகுந்த கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனாதிபதியும் நானும் மிகவும் பயனுள்ள கலந்துரையாடலை மேற்கொண்டோம். அங்கு பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கடந்துரையாடினோம். நமது இரு நாடுகளுக்கிடையிலான வரலாற்று மற்றும் கலாசார தொடர்புகளை, குறிப்பாக தேரவாத பௌத்தத்தின் அடிப்படையில் நமது வலுவான மற்றும் நெருக்கமான உறவுகளை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.

அத்துடன், எமது இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்படி, எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடுகள் கணிசமானளவு வளர்ச்சியடையும் என நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

## வருடாந்த கலால் ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ரூபாவாக குறைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். புதிய கட்டண திருத்தத்திற்கிணங்க கைத்தொழில் துறை அனுமதிக்காக ஒரே தடவையில் அறவிடப்படும் கட்டணம் இரண்டு கோடியே 50 இலட்சம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னங்கள்ளு போத்தல் உற்பத்திக்காக 10 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணம் 15 இலட்சமாக குறைவடைந்துள்ளது. பனங்கள்ளு போத்தல் உற்பத்திக்கான அனுமதிக்கட்டணம் புதிய திருத்தங்களுக்கிணங்க 5,00,000 மாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வினாகிரி உற்பத்திக் கட்டணம் 25,00,000 இருந்து 5,00,000 மாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரே தடவையில் அறவிடப்படும் கட்டணம் 25,00,000 மாக திருத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரதின நிகழ்வில் தமிழ்...

கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வுகள் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டன.

இராணுவ அணிவகுப்புக்குப் பின்னரான வழமையான கலாசார அணிவகுப்பு இம்முறை நடைபெறாததுடன், இலங்கையின் சகல கலாசாரக் கூறுகளையும் உள்ளடக்கிய சுதந்திர விழாவில் குறுகிய கலாசார அணிவகுப்பு மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்துடன் தாய்லாந்து பிரதமரின் வருகையினால் தமிழ், சிங்கள, ஆங்கில் மொழியில் அறிவிப்புகளுக்கு மேலதிகமாக தாய்லாந்து மொழியிலும் அறிவிப்பு செய்யப்பட்டமை தாய்லாந்து பிரதமரையும் தாய்லாந்து மக்களையும் கௌரவிக்கும் ஒரு நிகழ்வாகவே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில்...

நேற்றைய தினம் 29 சிறைச்சாலைகளிலிருந்து மேற்படி கைதிகள் விடுதலையாகி வெளியேறியுள்ளதுடன் அவர்களில் 25 பெண் கைதிகளும் உள்ளடங்குவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.அந்த வகையில் 114 சிறைக் கைதிகள் கண்டி பள்ளேகல சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் வாரியபொல சிறைச்சாலையிலிருந்து 73 கைதிகளும் மகர சிறைச்சாலையிலிருந்து 70 கைதிகளும் அனுராதபுர சிறைச்சாலையிலிருந்து 64 கைதிகளும் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# லயன் யுகத்திலிருந்து விடுபட காணி உரிமை அவசியம்



இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இன நல்லிணக்கம் மிக முக்கியமான விடயமாகும். எனவே, இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகளை அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை மலரும் பட்சத்திலேயே நிலையான சுதந்திரம் பிறக்குமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாழ்த்து செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல்லின சமூகங்களும் வாழும் இலங்கை சுதந்திரமடைந்து 76 ஆண்டுகளாகின்றன.

இந்த உன்னதமான நாளை இலங்கையர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது நாட்டுக்கே உரித்தான பாரம்பரிய நடைமுறைகளுடன் கொண்டாடுவோம்.

சுதந்திரம் என்பது தனக்கு மட்டும் அல்ல தன்னை சூழ உள்ளவர்களுக்கும் இருக்க வேண்டுமென்ற உணர்வோடு செயற்படுவோம். நாடு சுதந்திரமடைந்தாலும் எமது மலையக பெருந்தோட்ட மக்கள் அரசியல், பொருளாதாரம், சமூகரீதியிலான பிரச்சினைகளிலிருந்து இன்னும் விடுதலையாகவில்லை.

எனவேதான் எமது மக்களையும் தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்காக எல்லா விதமான நடவடிக்கைகளையும், நகர்வுகளையும் முன்னெடுத்துவருகின்றோம்.

லயன் யுகத்திலிருந்து விடுபட வேண்டுமெனில் காணி உரிமை அவசியம், அதனை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மன்னாரில் சுதந்திர தின நிகழ்வுகள்





**(மன்னார் குறூப் நிருபர்)**

சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் விசேட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றது. மன்னார் பிரதான பாலத்தில் சுதந்திர தின அணிவகுப்பு நிகழ்வு காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது. மன்னார் பொலிஸார், பாடசாலை மாணவர்களின் வாத்திய குழுவினர், மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் இணைந்து அணிவகுப்பு மரியாதையை முன்னெடுத்தனர்.

மன்னார் பிரதான பாலத்தடியில் ஆரம்பமான அணிவகுப்பு மரியாதை மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது. அணிவகுப்பு மரியாதையை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் முப்படை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தேசியக்கொடியை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு 2 நிமிட மௌன பிரார்த்தனையும் நடைபெற்றது.

பின்னர் அரசாங்க அதிபரினால் சுதந்திரதின உரை நிகழ்த்தப்பட்டது. இறுதியில் இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தையொட்டி மாவட்ட செயலக வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.



# வாத்துவ சுபுதி விகாரையில் அசோக மன்னரின் தர்ம தூண்



வாத்துவ, வஸ்கடுவ ராஜகுரு ஸ்ரீ சுபுதி விகாரையில் அசோக மன்னரின் தர்ம தூண் அமைக்கப்படவுள்ளது. இதன் நிமித்தம் விகாராதிபதி வஸ்கடுவ மகிந்தவங்ச மகாநாயக்க தேரர் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு அடிக்கல் நடும் சமய நிகழ்வுகளிலும் பங்குபற்றினார்.

இவ்வைபவத்தில் பங்குபற்றிய இந்திய உயர் ஸ்தானிகர் உள்ளிட்ட விருந்தினர்கள் புனித கபிலவஸ்து நினைவுச்சின்னங்கள் வைக்கப்பட்டுள்ள விகாரையில் பௌத்த பாரம்பரியப்படி ஆசிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்ட காலம் நிலவிவரும் கலாசார மற்றும் ஆன்மீக நட்புறவுகளின் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்திருந்த இவ்வைபவத்தில் பௌத்த நட்புறவை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் உயர் ஸ்தானிகர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய விகாராதிபதி, பௌத்த போதனைகளைப் பாதுகாப்பதற்கு அசோக மன்னர் அளித்துள்ள பங்களிப்புக்களை எடுத்துக்கூறியதோடு நினைவுச்சின்னங்களின் வரலாற்றையும் விவரித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சிகளை இந்நிகழ்வில் விபரித்த உயர் ஸ்தானிகர், இரு நாடுகளுக்கு இடையில் நிலவும் ஆழமான உறவுகள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச பௌத்த சம்மேளனத்தின் (ஐபிசி) பொதுச் செயலாளர் ஷார்ட்சே கென்சூர் ஜாங்சுப் சோடன் ரின்போச்சே உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# நீதிமன்ற உத்தியோகத்தர் வீட்டில் திருட்டு ; இருவர் கைது

**(யாழ். விசேட நிருபர்)**

நெல்லியடி பகுதியில் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நகைகளை கொள்ளையிட்ட இருவர் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

39 மற்றும் 27 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து தங்கநகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## பிரசித்த ஏல விற்பனை

01ம், 02ம் ஜுன் 2023, 4ம், 5ம் ஜுலை 2023, 03ம், 04ம் ஆகஸ்ட் 2023, 01ம், 04ம் செப்டம்பர் 2023, 02ம், 03ம் அக்டோபர் 2023, 30ம், 31ம அக்டோபர் 2023, 29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023, 29ம், 30ம் ஜனவரி 2024 இல் "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம, மஹரகம நகர கிளை, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, டாம் வீதி, மன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, அடிமை தீவு, கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07, மாவனல்ல, மினுவங்கொட, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய<br><br>ஏல் பி பினான்ஸ் கடுவெல கிளையின் பிரசித்த ஏல விற்பனையானது இல 484 அவிசாவெல்ல வீதி, கடுவெல எனும் முகவரியில் நடைபெறும். இல 482 அவிசாவெல்ல வீதி கடுவெல எனும் முகவரியில் நடை பெறமாட்டாது. | 24 பிப்ரவரி 2024 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ளை புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கணேமுல்ல, சிலாபம கொச்சிக்கடை-நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, கல்பிட்டிய, கெக்கிரவா, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை, ஜம்பெட்டா, கிராண்ட்பாஸ் | 27 பிப்ரவரி 2024 |
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, ரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை, பதுளை நகர கிளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை. | 28 பிப்ரவரி 2024 |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரம், யாழ்ப்பாணம் பிறீமியர், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, வட்டுக்கோட்டை, கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, பேசாலை, தெல்லிப்பளை, வவுனியா, சங்கானை, மன்னார், மருதங்கேணி, செங்கலடி, வாழைச்சேனை, கிண்ணியா, திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்முனை, ஏறாவூர், வஹாரை, சேருநுவர, கிரன், திருகோணமலை நகரம், வவுணதிவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, மத்திய முகாம் அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் | 5 மார்ச 2024 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.






76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு மடவளை மதீனா தேசிய பாடசாலையில் விசேட நிகழ்வொன்று நேற்று நடைபெற்றது. மடவளை சிவில் சமூக அமைப்புக்கள், மடவளை ஜும்ஆப் பள்ளிவாசல், மடவளை மதீனா தேசிய பாடசாலை ஆகிய இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் எம். எஸ். எம். அஸ்லம் கலந்து கொண்டு சிறப்பித்தார். இத்தினத்தை முன்னிட்டு மடவளை மதீனா தேசிய பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகளும் நட்டு வைக்கப்பட்டன. (படம் மாவத்தகம நிருபர்)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா மாவட்டத்தில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் இராணுவத்தினர், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்பு செயற்றிட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா பிரதேச வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பல இடங்களில் நேற்றைய தினம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

அதேநேரம் வவுனியா நகர மத்திய பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினரின் உதவியுடன் விசேட சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நகரசபையின் உதவியுடன் குப்பைகளும் அகற்றப்பட்டன அத்துடன் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

**(முல்லைத்தீவு குறூப் நிருபர்)**

பூநகரி பள்ளிக்குடாவில் கஞ்சாவுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 43 வயதுடையவர் என தெரியவருகின்றது. பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் இப்பகுதியில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இதன்போது பூநகரி பள்ளிக்குடாவில் கேரளா கஞ்சா 02 கிலோ 100 கிராமுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இளைஞர் யுவதிகளின் கல்வி மேம்பாட்டை இலக்காக கொண்டு செயற்படும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனத்தின் பழைய உறுப்பினர்களின் ஒன்றுகூடல் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. படத்தில் எம்.ரி.எம். பாஹிம், எம். ஹுசைன், நஸீர் சுபைர், ஸிந்தா சவாஹிர், நிஸாம் ஹஸீம், ரியாஸ் மிஹுலார், முஹம்மத் இம்தியாஸ், எம்.டி.எம். ரிஸ்வி, ஏ.எம். அஸ்கர், பாணந்துறை அஸ்வர், ஏ.சீ.எம். சப்ரி, ஸுஹைர், நஜ்முல் ஹுசைன், எம். ரபாய்தீன், எம்.வை.எம். அஷ்ரப், எம்.எஸ். எம். ஜின்னா, இப்ராஹிம் நிலாமுதீன், முஹம்மத் தாஸிம், முனைவர்.எம். தஸ்னீம், ஏ.எம்.எம். முஸம்மில் ஆகியோர் காணப்படுகின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.02.02
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| | | | |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5378 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,040,008.00 | ஆங்கில எழுத்து C; வெற்றி இலக்கங்கள் 6 8 7 2 5 9 |
| கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3620; சீட்டிழுப்பு திகதி 2024.02.02 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,597,070.32 | ஆங்கில எழுத்து O; வெற்றி இலக்கங்கள் 10 44 45 47; விசேட எழுத்து O; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 07934 |
| Mega POWER | சீட்டிழுப்பு இலக்கம் 1726; 2024.02.02; 51183 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 422,786,822.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ஆங்கில எழுத்து T; சுப்பர் இலக்கம் 22; வெற்றி இலக்கங்கள் 03 32 35 71 |
| Lucky 7 VIP | திகதி 2024.02.02; சீட்டிழுப்பு இலக்கம் 0204 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,438,146.32 | ஆங்கில எழுத்து D; L7 எழுத்து D; வெற்றி இலக்கங்கள் 5 5 8 5 6 3 |
| ராசி சுப பலன் | திகதி 2024.02.02; சீட்டிழுப்பு இலக்கம் 687 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,878,277.16 | வெற்றி இலக்கினம் கன்னி; வெற்றி இலக்கங்கள் 14 26 38 49; தனயோக இலக்கம் 14716; நாளுக்கான விதி எண் 12 |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1408; 2024.02.02 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,780,226.40 | ஆங்கில எழுத்து U; வெற்றி இலக்கங்கள் 17 18 26 65; விசேட எழுத்து U; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 40507 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.02.03
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| | | | |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5379 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,152,704.00 | ஆங்கில எழுத்து X; வெற்றி இலக்கங்கள் 3 3 3 5 9 0 |
| கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3621; சீட்டிழுப்பு திகதி 2024.02.03 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,597,070.32 | ஆங்கில எழுத்து C; வெற்றி இலக்கங்கள் 22 31 70 74; விசேட எழுத்து C; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 47554 |
| Mega POWER | சீட்டிழுப்பு இலக்கம் 1727; 2024.02.03; 13717 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 422,920,886.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ஆங்கில எழுத்து C; சுப்பர் இலக்கம் 08; வெற்றி இலக்கங்கள் 51 57 62 74 |
| Lucky 7 VIP | திகதி 2024.02.03; சீட்டிழுப்பு இலக்கம் 0205 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,522,761.52 | ஆங்கில எழுத்து T; L7 எழுத்து T; வெற்றி இலக்கங்கள் 9 3 7 0 3 2 |
| ராசி சுப பலன் | திகதி 2024.02.03; சீட்டிழுப்பு இலக்கம் 688 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,878,277.16 | வெற்றி இலக்கினம் கடகம்; வெற்றி இலக்கங்கள் 02 18 56 59; தனயோக இலக்கம் 24492; நாளுக்கான விதி எண் 06 |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1409; 2024.02.03 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,999,514.40 | ஆங்கில எழுத்து S; வெற்றி இலக்கங்கள் 38 72 74 82; விசேட எழுத்து S; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49256 |

# தாய்லாந்து பிரதமரின் இலங்கை விஜயம்


















# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு மாவட்ட விவசாய அமைப்புக்களுடனான கலந்துரையாடல்





கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் விவசாய அமைப்புக்களுடனான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் அவற்றை நிவர்த்தி செய்ய முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் பங்களிப்பு செய்யும் பாலங்கள் தொடக்கம் வீதிகள் வரை புனரமைப்பது, உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது அவற்றுக்கான உத்தரவாத விலை நிர்ணயித்தல் மற்றும் யானைத் தொல்லைகளால் விளைநிலங்கள் பாதிக்கப்படுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றுக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி முரளிதரன், நீர்ப்பாசன பணிப்பாளர் (நீர்ப்பாசன திணைக்களம் மத்தி) எஸ். நாகரெத்தினம், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆறுமுகம் தேவராஜ், தேசிய அமைப்பாளரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் தனிப்பட்ட செயலாளருமான தம்பிராஜா தஜீவரன், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்வரன் , மற்றும் நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கொக்கட்டிச்சோலையில் இன்று பிரம்ம குமாரிகள் இராஜயோக தியான நிலையம் அங்குரார்ப்பணம்

### ஆன்மீக அதிதியாக அவுஸ்திரேலிய சகோதரர் சார்லி ஹொக், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்பு







மட்டக்களப்பின் படுவான்கரை பிரதேசத்தின் சிவபூமி எனக் கருதப்படும் மகிமை பொருந்திய கொக்கட்டிச்சோலையில் சிவனை நினைந்து வணங்கும் 18 அடி உயரமான பாரிய சிவலிங்க ரூப தியான மண்டம் இன்று (05) காலை 9.00 மணிக்கு அவுஸ்திரேலிய நாட்டின் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், 50 வருட தவயோகியுமான மூத்த ஆன்மீக சகோதரர் சார்லி ஹொக் ஆன்மீக அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைக்கின்றார்.

ஜோதிர்லிங்க கண்காட்சிக் கூடத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொள்கின்றார்.

மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ள இந்த ஆன்மீக வளாகத்தில் லக்ஷ்மி நாராயணன் உருவச்சிலை, இந்தியாவின் மிகப் பழைமை வாய்ந்த ஜோதிர்லிங்கங்களின் மாதிரிகளே மக்களின் தரிசனத்திற்காக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்துக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவனை நினைந்து வழிபடும் சிவலிங்க தரிசன வழிபாட்டை முன்னிலைப்படுத்தும் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் அமைதியான சூழலில் அமைந்துள்ள இவ்வளாகத்தில் தியான மண்டப காட்சிக்கூடம், இராஜயோக தியானத்தின் மகிமையை வெளிப்படுத்தும் படவிளக்கங்களுடனான கண்காட்சிக் கூடம், ஆன்மீக வகுப்பு மண்டபம் மற்றும் தங்கியிருந்து தியானப் பயிற்சி செய்வதற்கான அறைகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் காணப்படும் இராஜயோக நிலையங்களில் சகோதரத்துவ உணர்வை வளர்த்தல், இராஜயோக தியானம், ஆன்மீகக் கல்வி, சமூக சேவை, மருத்துவசேவை உள்ளிட்ட மானிட மேன்மைக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பல்லினங்கள் வாழும் இலங்கையில் இனங்களிடையே சாந்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தியானப் பயிற்சிகளை வழிவகுக்கின்றன. மனஅமைதியைத் தேடுவோருக்கு இத்தகைய தியானப் பயிற்சிகள் சிகிச்சையளிக்கின்றன. இராஜயோகமானது புதிய ஆன்மீகப் பயணமாகக் கொள்ளப்படுகின்றது. இதனால் மாறுபட்ட கலாசாரங்கள் கொண்ட எமது நாட்டில் சமூக நல்லுறவை மேம்படுத்துதல், மனித விழுமியங்களை மேம்படச் செய்தல், மக்களிடத்தில் ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவித்தல், தலைமைத்துவப் பண்பை வளர்த்தல், உடல் உள ஆரோக்கியம் மற்றும் மானிட சேவைக்காக தயார்படுத்துதல் போன்ற மனப்பாங்கை தியானம் வளர்க்கின்றது.

இந்தியா உள்ளிட்ட உலகின் பல நாடுகளுக்கு பயணம் செய்து ஆன்மீக சேவையாற்றி வரும் சார்லி ஹொக் 10 நாட்கள் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்துள்ளார். அவர் கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களுக்குச் சென்று ஆன்மீகப் பணியாற்றவுள்ளார்.

அவர் கடந்த 03.02.2024 சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு இராஜயோக நிலையத்திற்கு வருகை தந்த போது கலாசார நிகழ்வுகளுடன் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளால் வரவேற்கப்பட்டார்.

04.02.2024 ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நண்பகல் வரை மட்டக்களப்பு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த இராஜயோக நிலையத்தின் அங்கத்தவர்களுக்காக தியானத்துடன் கூடிய 'தெய்வீகக் குடும்பத்தின் அங்கத்தவர்களாக இருப்பவர்களின் மனப்பாங்கு' எனும் தலைப்பில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்றன.

பிற்பகலில் மட்டக்களப்பு தேவபுரம், பலாச்சோலை, மகிழவெட்டுவான், கொம்மாதுறை, களுவன்கேணி, மாவடிவேம்பு ஆகிய இடங்களை உள்ளடக்கி வந்தாறுமூலையில் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தையும் திறந்து வைத்தார். இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வி.கனகசிங்கம் கலந்து கொண்டார்.

சிவலிங்க வழிபாட்டை வலியுறுத்தியும் மனஅழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள மக்களின் மனதை அமைதிப்படுத்தவும் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலைய சகோதர சகோதரிகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

**சிவம் பாக்கியநாதன்**
(மட்டக்களப்பு விசேட நிருபர்)

### மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பின்கீழ் 24 கைதிகள் விடுவிப்பு



***(மட்டக்களப்பு விசேட நிருபர்)***

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 24 கைதிகள் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து நேற்று (04) விடுவிக்கப்பட்டனர்.

சிறைக் கைதிகளும் மனிதர்களே அவர்கள் சமூகத்தில் இணைக்கப்பட்டு நற்பிரஜைகளாக வாழ வேண்டும் எனும் ஜனாதிபதியின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நோக்கில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எஸ். பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறு குற்றங்கள் புரிந்தவர்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்த வசதி இல்லாமல் சிறையிலிருந்தவர்கள் உள்ளிட்ட கைதிகளே விடுதலை செய்யப்பட்டனர்.



தேசிய சுதந்திர தின வைபவம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வளாகத்தில் நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

## 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தையொட்டி, கிண்ணியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம். (படம: கிண்ணியா மத்திய நிருபர் )



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகள். (படம்:ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)



போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகள். (படம் பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் எற்பாட்டில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகள்



இலங்கையின் 76 வது சுதந்திர நிகழ்வுகள் விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் பேராசிரியர் ஐயந்த லால் ரத்னசேகர தலைமையில் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

## இரத்ததான முகாம்

***(தோப்பூர் தினகரன் நிருபர்)***

மூதூர் மதார் நம்பிக்கை நிதியம் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு எட்டாவது தடவையாக ஏற்பாடுகள் செய்திருந்த பிரமாண்டமான இரத்ததான முகாம் மூதூர் தள வைத்தியசாலையில் நேற்று காலை நடைபெற்றது. மூதூர் தளவைத்தியசாலை இரத்தவங்கியின் வைத்தியசாலையினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினர். அதிகளவானோர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். இரத்ததான முடிவில் போசாக்கான பானம் சிற்றுண்டி என்பன இவர்களால் வழங்கப்பட்டன.

சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிலையத்தின் மாணவ மாணவிகள் மலையக தியாகிகள் தினத்தை அண்மையில் அனுஷ்டித்த போது பிடிக்கப்பட்ட படங்கள். படங்கள் சந்திரகுமார் பஜித்ரா



# யாழில் தேசியக் கொடிகளுடன் சுதந்திர தின பேரணி!







நாட்டின் 76 ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் சுதந்திர தின பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாண மக்களும் வெளி மாவட்ட மக்களும் கலந்துகொண்டனர். யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் ஆரம்பமான இப்பேரணி வைத்தியசாலை வீதியூடாக வீரசிங்கம் மண்டபத்தை அடைந்து நிறைவுற்றது. நடைபவனி, மோட்டார் சைக்கிள் பவனி, முச்சக்கரவண்டி பவனி முதலியனவும் இப்பேரணியில் இடம்பெற்றன.



## உலக ஹிஜாப் தின நிகழ்வுகள்

லண்டனை வசிப்பிடமாக கொண்ட சாய்ந்தமருது சிறுமி மர்யம் ஜெஸீம் உலக ஹிஜாப் தின மாநாட்டை நிகழ்நிலை ஊடாக ஆரம்பித்து வைத்தார். ஐக்கிய அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் உலக ஹிஜாப் தின அமைப்பின் ஸ்தாபகர், சகோதரி நஸ்மாகானின் அழைப்பையேற்று, நிகழ்நிலை ஊடாக இடம்பெற்ற 'உலக ஹிஜாப் தின மாநாட்டை லண்டனில் வதியும் சாய்ந்தமருதைச் சேர்ந்த மர்யம் ஜெஸீம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். சென்ற ஆண்டும் ஹிஜாப் மாநாட்டை ஆரம்பித்து வைத்தது மட்டுமல்லாமல் ஐக்கிய இராஜ்ஜியத்தில் இயங்கும் பிரபல இஸ்லாமிய தொலைக்காட்சியான இஸ்லாம் சணல் தொலைக்காட்சியின் டுடேய்ஸ் ஷோ எனப்படும் நிகழ்ச்சிக்கும் நேர்காணலுக்காக இவர் அழைக்கப்பட்டிருந்தார். இதன்போது தனது ஹிஜாப் அனுபவங்கள், அதனை அணிவதன் முக்கியத்துவம் மற்றும் உலக ஹிஜாப் தின நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எம்.எம்.ஜெஸ்மின்)




இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கேள்வி அழைப்பு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ABC வழங்குதல்

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) இரத்தினபுரி பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டங்கள்) பிரிவின் பெறுகைக் குழுவின் தலைவரால் பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டங்கள்) அலுவலகத்தினால் மேம்படுத்தப்பட்ட குருவிட்ட நகர அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக ABC கொள்வனவு செய்வதற்கு தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

2. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கீழ்க்காணும் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - www.rda.gov.lk

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டம்) அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இரத்தினபுரி.**


**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் பொது நோக்கத்திற்காக தேவைப்படும் பின்வரும் நிலங்கள் விபரம் 2024 ஆண்டு தை மாதம் 12ம் திகதி ஆகிய அறிவிப்பு சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. பத்திரம் (III) ஆவது பகுதியில் பார்க்கவும்.

**எமது குறிப்பு இலக்கம் :**
KHDS/LND/03/ACQ/other/18

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : இரத்தினபுரி
பிரதேச செயலகம் : கஹவத்தை
கிராம சேவகர் பிரிவு : 227 பீ-எந்தான
கிராமம் : எந்தான
வரைபட இல : துண்டு இல. 620568 பிரிவு இல 01 பத்திர இல 01
துண்டு இல : 01
கிராமத்தின் பெயர் : எந்தான தோட்டம்
அளவு : ஹெக்டயார் 0.0405

**சஞ்ஜீவனி கண்டம்பி**
**பிரதேச செயலாளர்**
**கஹவத்தை**

**2024ம் வருடம் தை மாதம் 30 ஆந் திகதி**
**கஹவத்தை பிரதேச செயலாளர் அலுவலகம்**


## பிரசித்த ஏல விற்பனை

02ம், 03ம் அக்டோபர் 2023, 30ம், 31ம் அக்டோபர் 2023, 29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023, 29ம், 30ம் ஜனவரி 2024 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல், ரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 22 பிப்ரவரி 2024 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
5. ஆர்வமுடைய விலை கூறுவோர் மேலதிகத் தகவல்களையும், தெளிவுபடுத்தல்களையும் கீழே குறிப்பிடப்பட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், விலை கூறலுக்கான ஆவணங்களை கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் 2024.02.05 தொடக்கம் 2024.02.22 வரை வேலை நாட்களில் **0900** மணியிலிருந்து **1500** மணி வரை இலவசமாகப் பார்வையிடலாம்.
6. ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணங்களின் முழுமையான தொகுதியினை ஆர்வமுடைய விலைகூறலாளர்கள் **ரூபா 12,100.00 (வரிகள் உள்ளடங்கலாக)** மீளளிக்க முடியாத கட்டணத்தைச் செலுத்துவதன் மீது 2024.02.05 இருந்து 2024.02.22 வரை வேலை நாட்களில் **0900** மணியிலிருந்து **1500** மணி வரை கீழே குறிப்பிட்டவர்களுக்கான எழுத்திலான விண்ணப்பத்தினை சமர்ப்பித்து கொள்வனவு செய்யலாம். மீளளிக்க முடியாத கட்டணக் கொடுப்பனவு கீழே குறிப்பிடப்பட்டவர் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பண வைப்பின் வடிவில் அமைந்திருக்கும்.
7. இரு பிரதிகளிலான முத்திரையிடப்பட்ட ஏல விலை கூறல்கள் 2024.02.26 அன்று **1000** மணிக்கு அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 1, இலங்கை வங்கி மாவத்தை, ‘இலங்கை வங்கி சதுக்கம்’, இல. 01, இலங்கை வங்கி, 14 ஆம் மாடியில் கிடைக்கப் பெறுகின்ற விலை கோரல் பெட்டியில் வைப்பிலிடப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை கூறல்கள் திறக்கப்படாது திருப்பி அளிக்கப்படும். ஏல விலை கூறல்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாக ஏல விலை கூறல்கள் சமூகமளிப்பதற்கு ஏல விலை கூறலாளர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. ஏல விலை கூறல்கள் 2024.05.27 வரை செல்லுபடியாகும்.
9. அனைத்து ஏல விலை கூறல்களுடனும் நியம படிவங்களின் (ஏல விலை கூறல்) 9ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விலைகூறல் முறி படிவத்தைப் பயன்படுத்தி (கேள்வி உத்தரவாதத்தின் மீது இரத்துச் செய்ய முடியாத நிபந்தனையற்ற) இலங்கை வங்கி தவிர்ந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2024.06.24 வரை செல்லுபடியான **ரூபா 600,000.00 (ரூபா ஆறு இலட்சம்)** கொண்ட வங்கி உத்தரவாதப் படிவத்தில் உள்ள ஏல விலை கூறல் - பிணை அல்லது அதே தொகைக்கான பண வைப்புச் சீட்டு / வங்கி வரைபு இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
10. 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பகிரங்க ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது ஏதேனும் அதன் திருத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாட்டின் பிரகாரம் PCA3 படிவம் ஏல விலை கூறலுடன் இணைக்கப்பட வேண்டும்.
11. விலைக்கூறலுக்கு முன்கூட்டிய கூட்டம் தளத்தில் 2024.02.14 அன்று **1100** மணிக்கு இடம்பெறும்.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
“BOC சதுக்கம்” இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 094 112204260, 094 112544310, 094 11 2434786
மின்னஞ்சல்: properties@boc.lk

1975 BOC
www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கைத்தொழில் அமைச்சு
## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்

**HIRING OF GRAB BUCKETS. CONTAINER BOXES AND TARPOULIN**

1. கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் முழுவதுமாக அரசாங்கத்திற்கு உரிமையுள்ள கம்பனியான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழே விபரிக்கப்பட்டவாறு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

| விலைமனு இல. | பொருட்களின் விளக்கம் | ஆவண கட்டணங்கள் (மீளளிக்கப் படாதது) | விலை மனுப்பிணை | விலைமனுப் பிணை கட்டாயமாக செல்லுபடியாகும் காலப்பகுதி | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| LMSL/SUP/DPC/04/2024 | Hiring of Grab Buckets, Container Boxes and Tarpaulin | 10,000 | 1,000,000 | 22.05.2024 | 16.02.2024 பி.ப. 2.30 மணிக்கு |

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இராஜகிரிய, சரணமாவத்தை, 341/13, ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்று 2024.02.02 ஆம் திகதியிலிருந்து 2024.02.15 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொடர்பிலக்கங்கள்: 011-2882025, 2883951, 2883952.
4. 2024.02.02 ஆம் திகதியிலிருந்து 2024.02.15 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 10,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் நிதிப் பிரிவின் காசாளரின் கருமபீடத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
5. பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ என தனித்தனியாக இரு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு மேலே குறிப்பிட்டுள்ளவாறான திகதியன்று அல்லது அதற்கு முன்னராக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், 341/13, சரண மாவத்தை, இராஜகிரிய என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்.**

---

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல் மட்டம்) கீழே விபரிக்கப்பட்டுள்ள சேவைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

**அட்டவணை - 01**

| விலைமனு இல. | செயற்றிட்டப் பெயர் | ஒரு வருடத்திற்கு வரிகள் நீங்கலாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகுசெலவு (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணைத் தொகை | சேவைக் காலம் | விலைமனு செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ‘செத்சிரிபாய’ I ஆம் கட்டத்தில் சுகாதார சுத்திகரிப்பு சேவைகள், குப்பை அகற்றல் மற்றும் தரைசீராக்கப்பட்ட பிரதேச பராமரிப்பு மற்றும் நஅஅ தலைமையலுவலக உள்ளக சுத்திகரிப்பு. **PD/UDA/DPC/Jani/Seth/03/2024** | 36,000,000.00 | 9,600.00 மற்றும் வரிகள் | 360,000.00 | 03 வருடங்கள் | 2024 ஜூன் 17 ஆம் திகதி வரையும் |

01. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள ஏனைய தேவைப்படுத்தல்களையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 07ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை தலைவரிடமிருந்து பெற்று **2024 பெப்ரவரி 05ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 19ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும்** பெறுகை அலுவலகத்தின் தலைவரிடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
04. **2024 பெப்ரவரி 05 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 19 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும்** மேலேயுள்ள 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகின் பெறுகை தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரினால் கொள்வனவு செய்யப்படலாம்.
05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதுமானதும் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான வங்கி உத்தரவாத பாங்கில் விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையங்கள் மற்றும் விலைமனுப்பிணையங்களின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 01 ஆம் அட்டவணையில் கூறப்பட்டிருப்பதுடன் அவைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
06. ஒவ்வொரு விலைமனுவும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை, 7 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய’’, பத்தரமுல்ல என முகவரியிடப்பட்டு 2024 பெப்ரவரி 20 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
07. பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகில் 2024 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனுக் கூட்டமானது நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் இந்த கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
08. விலைமனுதாரர்களை தெரிவு செய்தலில் விலைமனுதாரரின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவச் சொத்து நிலைமை ஆகியன கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படும். தரம் குறைந்தளவில் செயற்பாட்டை மேற்கொண்ட விலைமனுதாரருக்கு எந்தவொரு விலைமனுவையும் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்படமாட்டார்கள்.
09. எந்தவொரு விலைமனுக்களையும் தயாரித்தல் தொடர்பான ஆகுசெலவிற்கான எந்தவொரு பொறுப்பையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ள மாட்டாது. திணைக்கள பெறுகைக் குழுவானது (மேல் மட்டம்) பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவொன்றை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. திணைக்கள பெறுகைக் குழுவின் (மேல் மட்டம்) தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**07 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய’’, I ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

---

# கேள்வி கோரல் அழைப்பு

**மத்திய மாகாண கல்வித் திணைக்களம்**

**2024/2025ம் ஆண்டிற்காக குருதெனிய கல்வி அபிவிருத்தி ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தில் (CEDRAT) உணவகத்தை நடத்திச் செல்லல் சார்பாக விலைமனுக் கோரல்**

01. கேள்வி ஆவணங்களை 2024.02.05 முதல் 2024.02.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான நேரத்திற்குள் மீளளிக்கப்படாத கீழ்க்காணும் கேள்வி ஆவணக் கட்டணத்தை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கேள்வி ஆவண வேண்டுதல் கடிதமொன்றை மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

| | விடயம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 01 | குருதெனிய கல்வி அபிவிருத்தி ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தில் (CEDRAT) உணகவத்தை நடத்திச் செல்லல் | 1000.00 |

02. குறித்த மாதிரிகளில் மாத்திரம் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.02.27 பி.ப. 2.00 இற்கு முன்பு மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபாலில் சமர்ப்பிப்பதாயின் தலைவர், பெறுகைக்குழு, மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதி நிதியொருவருக்கு ஆளடையாளத்தை உறுதி செய்து விட்டு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மத்திய மாகாண கல்வித் திணைக்களம்,**
**கண்டி.**
2024.02.05

**தொ.பே./பெக்ஸ்: 081 2224041/081 2223343**
**மின்னஞ்சல்: cpceduacc@gmail.com**

---

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்
## உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டம்

**Towing Boom Lift, 250 kVA டீசல் மின்பிறப்பாக்கி மற்றும் க்றூ கெப் ஆகியவற்றை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

Towing Boom Lift, Three Phase 250 kVA டீசல் மின்பிறப்பாக்கி மற்றும் க்றூ கெப் ஆகியவற்றை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஹல்துமுல்ல பிரதேச சபை மற்றும் பதுளை, மாநகர சபை ஆணையாளர் சார்பாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | பொருட்களின் விபரம் | விநியோக அமைவிடம் மற்றும் விநியோகக் காலம் | ஆகக் குறைந்த தகைமை | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|---|---|
| LDSP/UP/BD/BMC/G/24/01 | புத்தம் புதிய பாவிக்கப்படாத Towing Boom Lift (Trailer Type) வழங்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | பதுளை<br>120 நாட்கள் | குறைந்தபட்சம் 10 வருட காலங்களுக்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும். | ரூபா 90,000.00<br>2024-05-20ஆம் திகதி வரையில் செல்லுபடியாகக் கூடியது |
| LDSP/UP/BD/BMC/G/24/02 | புத்தம் புதிய பாவிக்கப்படாத Three Phase 250 kVA டீசல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | பதுளை<br>30 நாட்கள் | அரசாங்க நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 5 மின்பிறப்பாக்கி தொகுதிகளை வழங்கியிருத்தல் வேண்டும் குறைந்தபட்சம் 10 வருட காலங்களுக்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும். | ரூபா 170,000.00<br>2024-05-20ஆம் திகதி வரையில் செல்லுபடியாகக் கூடியது |
| LDSP/UP/BD/HMPS/G/24/01 | புத்தம் புதிய பாவிக்கப்படாத க்றூ கெப்பை வழங்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | ஹல்துமுல்ல<br>120 நாட்கள் | அரசாங்க நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 5 க்றூ கெப்களை வழங்கியிருத்தல் வேண்டும் குறைந்தபட்சம் 10 வருட காலங்களுக்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும். | ரூபா 130,000.00<br>2024-05-20ஆம் திகதி வரையில் செல்லுபடியாகக் கூடியது |

2. தேவைப்பாடுகளை நிறுவும் சகல ஆவணங்களையும் விலைமனுவுடன் வழங்குதல் வேண்டும். மேற்கூறப்பட்ட ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்பாடுகள் விலைக்கோரலின் ஆரம்ப விலைக்கோரல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். எந்தவொரு விலைமனுதாரரும் ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையானால் அவை நிராகரிக்கப்படும்.
3. விலைக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் மேற்கொள்ளப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பதுளை உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டம், மாவட்டப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (clguva@gmail.com) மற்றும் விலைக்கோரல் ஆவணங்களை 2024.02.05ஆம் திகதி முதல் 2024-02-25ஆம் திகதி வரையில் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, உள்ளூராட்சித் திணைக்களத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை clguva@gmail.com எனும் மின்னஞ்சலில் அல்லது 0714951055 எனும் WhatsApp இலக்கத்தின் ஊடாக செலுத்தியதன் பின் 2024-02-05ஆம் திகதி முதல் 2024.02.25ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் பின்வரும் முகவரியிலுள்ள உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்களை 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். நிகழ்நிலை (on-line) ஊடாக அல்லது சமுகம் தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திணைக்கள பெறுகைக் குழு, உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா எனும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024-04-26ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இணைக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற கோரிக்கை வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டம் (டுனுளுீ)இ**
**திட்ட அமுலாக்கல் பிரிவு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**
**0552222407**

2024-02-05.

Daily News Classifieds, the Housewives' companion

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343


## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை 2024 ஜனவரி 26ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
பர்பெவுவல் ரியல்டி (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இல :** பீவீ 68583

**பதிவு முகவரி:**
03ம் மாடி, பிரின்ஸ் அல்ப்ரெட் டவர்,
இல 10, அல்ப்ரெட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு 3.

**கம்பனியின் புதிய பெயர்:**
ஃப்ரீ லங்கா ரியல்டி (பிரைவட்) லிமிட்டட்

டெலொய்ட் கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி செயலாளர்கள், 03ம் மாடி,
இல 2, காசல் ஒழுங்கை. கொழும்பு 4.

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2023 ஜூலை மாதம் 04ம் திகதி கீழ் குறிப்பிட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.

**கம்பனியின் பெயர்:**
ரொயென்டா டிரெவல்ஸ் என்ட் டுவர்ஸ் (பீவீடீ) எல்டீடி

**கம்பனியின் இல: P V 00279571**

**கூட்டிணைப்பு திகதி**
04 ஜூலை 2023

**பதிவு அலுவலகம்:**
இல. 2A, கே சிறில் சீ பெரேரா மாவத்தை,
கொழும்பு 13.

வடுவரகே டொன் பத்மசிறி பெரேரா
செயலாளர்

## பகிரங்கமாக மன்னிப்புக் கோரல்

2015 இல. 05 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் கீழ் நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் நடைபெறும் இல. 145, மஹியங்கனை வீதி, புவக்கொடமுல்ல, பதுளையில் வசிக்கும் ராமசாமி சந்ரகுமார் ஆகிய நான், மருந்துச் சிட்டை ஆவணத்தில் குறிப்பிடப்படாத மேற்கத்தைய மருந்தாள Gablin 1500mg வில்லைகள் 1330ஐ விற்பனை செய்த குற்றத்திற்கு வழக்கு இலக்கம் 61394இன் கீழ் குற்றவாளியாக்கப்பட்டு பதுளை நீதவான் நீதிமன்றத்தினால் எனக்கு ரூபா 50,000.00 தண்டத்தொகையை செலுத்துவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இது போன்ற குற்றமொன்றை மேற்கொண்டமை சம்பந்தமாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் மக்களிடம் மன்னிப்புக் கோருவதுடன் இதன் பிறகு இவ்வாறான குற்றங்கள் என்னால் மேற்கொள்ளப்படாதிருப்பதனை உறுதி செய்கிறேன்.

**ராமசாமி சந்ரகுமார்.**

## பெறுகை அறிவித்தல் – தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB)

### மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

மானிய நிதி - WORLD Bank - General / Education Modernization Project (GEMP)

# மத்திய மாகாணத்திற்குள் அமைந்துள்ள தேசிய கல்வியற் கல்லூரிகள் மற்றும் அரச ஆசிரியர் கல்லூரிகளில் அத்தியவசிய பழுதுபார்த்தல் வேலைகளை நிறைவேற்றல்

1. மத்திய மாகாண கல்வித் திணைக்களம் சார்பாக மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக குறித்த தகைமையுடைய மற்றும் தகுதியுடைய பூர்த்தி செய்யப்பட்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுவதுடன் மேற்படி வேலைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட பொறியியல் அளவுப் பத்திர தொகையும் ஒப்பந்தக் காலமும் கீழ்க்காணும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2. குறித்த கைத்தொழிலிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி அப் பட்டியலில் ஒவ்வொரு வேலைக்கும் குறித்தவாறு குறிப்பிடப்பட்டுள்ள தரத்தின் நாளதுவரைக்கு உட்படுத்தப்பட்டுள்ள (CIDA) பதிவு இருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலுக்கு உற்படாது இருத்தல் வேண்டும்.
3. இது பற்றிய மேலதிக விபரங்கள் பிரதம பொறியியல் (பாடசாலைக் கட்டிடம்) மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி அலுவலகத்தில் (தொ.பே. இல. - 081 - 2225494) பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2024.02.05 முதல் 2024.02.26 வரை அலுவலக நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை அவ் அலுவலகத்தில் குறித்த ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.02.05 முதல் 2024.02.26 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள், கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கான எழுத்துமூல விண்ணப்பத்துடன் குறித்த கேள்வி ஆவணக் கட்டணத்தை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை பிரதம பொறியியலாளர் (பாடசாலை கட்டிடங்கள்) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
5. இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.02.12 மு.ப. 10.00 இற்கு மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டியில் நடைபெறும். இவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
6. மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியுடன் தயாரித்து பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.02.27 மு.ப. 10.00 வரை கண்டியில் அமைந்துள்ள மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது அந் நேரத்திற்கு முன்பு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி என்ற முகவரிக்கு கிடைக்கச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
7. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மத்திய மாகாண கல்வித் திணைக்களம் பெயரில் அட்டவணையில் குறிப்பிடப்படும் கால எல்லைக்கு செல்லுபடியாகுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) பிரிவிற்கு காசாக செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை சகல கேள்வியுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களில் கோரப்பட்டுள்ள தொழில்நுட்ப நிதி மற்றும் ஏனைய தகைமைகளுடன் ஆவணங்களின் உறுதி செய்த பிரதிகளை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. சகல கேள்வியினதும் பெறுமதி ரூ.5 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர்களால் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்த சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
10. இக்கேள்வி அழைப்பு தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறையில் செயற்படுத்தப்படுவதுடன் இதன் கீழ் பெறுகை மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களின் வரி இன்றிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.50 மில்லியனுக்கு குறைவாகும். 2023.02.09ம் திகதிய அரச நிதி சுற்று நிருபம் 04/2016(iv) இன் பிரகாரம் CIDA தரம் குறிப்பிடுவதுடன் 2019.05.08ம் திகதிய அரச நிதி சுற்றுநிருபம் 04/2016(ii) இன் பிரகாரம் பிரதேச கேள்விதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | கேள்வி இலக்கம் | கைத்தொழில் | பொறியியல் அளவுப் பத்திர பெறுமதி (ரூ) (வெட் இன்றி) | தேவைப்படும் பதிவு (CIDA) | மீளளிக்கப்படும் கேள்வி பிணை அல்லது தொகை | | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை செல்லுபடி காலம் (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) மீளளிக்கப்படாத |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணையின் பெறுமதி (ரூ) | காசு வைப்பு (ரூ) | | | |
| **பேராதனை தேசிய கல்வியியற் கல்லூரி** | | | | | | | | | |
| 01 | CP/EDU/NCB/2024/01/01 | 27.4 x 7.6M மூன்று மாடி எதிரிவீர சரத்சந்த விடுதிக் கட்டிடம் பழுதுபார்த்தல் | 6,736,179.20 | C6,C7,C8 | 134,000.00 | 67,000.00 | 56 | 105 | 3,500.00 |
| 02 | CP/EDU/NCB/2024/01/02 | 27.4 x 7.6M மூன்று மாடி செனரத் பரனவிதான விடுதிக் கட்டிடம் பழுதுபார்த்தல் | 6,466,084.00 | C6,C7,C8 | 128,000.00 | 64,000.00 | 56 | 105 | 3,500.00 |
| 03 | CP/EDU/NCB/2024/01/03 | 27.4 x 7.6M மூன்று மாடி ஜோர்ஜ் கீட் விடுதிக் கட்டிடம் பழுதுபார்த்தல் | 6,424,357.30 | C6,C7,C8 | 128,000.00 | 64,000.00 | 56 | 105 | 3,500.00 |
| 04 | CP/EDU/NCB/2024/01/04 | 27.4 x 7.6M மூன்று மாடி சேனக்க பிபிலே விடுதிக் கட்டிடம் பழுதுபார்த்தல் | 5,100,731.60 | C6,C7,C8 | 102,000.00 | 51,000.00 | 56 | 105 | 3,500.00 |
| **மஹாவலி தேசிய கல்வியியற் கல்லூரி** | | | | | | | | | |
| 05 | CP/EDU/NCB/2024/01/05 | ஆரம்ப செயற்பாடுகள் கட்டிடம் (37Mx9.5M) உத்தியோகபூர்வ இல்லத்துடன் மேம்படுத்தல் | 18,303,697.40 | C5,C6,C7 | 366,000.00 | 183,000.00 | 63 | 105 | 10,000.00 |
| 06 | CP/EDU/NCB/2024/01/06 | சீதாதேவி விடுதிக் கட்டிடம் மேம்படுத்துதல் | 14,299,161.10 | C5,C6,C7 | 284,000.00 | 142,000.00 | 63 | 105 | 8,500.00 |
| 07 | CP/EDU/NCB/2024/01/07 | B6,B7,B8,B11 பிரிவுகள் மற்றும் நீர் தொடர்பு (A12 உடிஸ் நீர் தாங்கி) மேம் படுத்துதல் | 6,382,909.80 | C6,C7,C8 | 126,000.00 | 63,000.00 | 56 | 105 | 3,500.00 |
| **ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி** | | | | | | | | | |
| 08 | CP/EDU/NCB/2024/01/08 | காணி சுற்றியுள்ள எல்லை பேலியை மேம்படுத்துதல் | 11,672,123.00 | C5,C6,C7 | 232,000.00 | 116,000.00 | 63 | 105 | 7,500.00 |
| 09 | CP/EDU/NCB/2024/01/09 | ஆன் விடுதி அத்தியவசிய பழுதுபார்த்தல் வேலைகள் (39.0Mx6.35M) மற்றும் மேலதிக | 10,600,235.60 | C5,C6,C7 | 212,000.00 | 106,000.00 | 63 | 105 | 7,500.00 |
| 10 | CP/EDU/NCB/2024/01/10 | உடைந்துள்ள "பெரபட் சுவர்" (Parapet Wall)(16M) மற்றும் கொங்கிறீட் கால்வாயை பழுதுபார்த்தல். | 3,972,335.50 | C7,C8,C9 | 78,000.00 | 39,000.00 | 56 | 91 | 3,000.00 |
| 11 | CP/EDU/NCB/2024/01/11 | அழகியற்கலை கட்டிடத்தின் உடைந்துள்ள கூரையை பழுதுபார்த்தல் (35.8Mx6.15M) ஏனைய கட்டிடங்களின் அத்தியவசிய பழுதுபார்த்தல். | 3,006,604.70 | C7,C8,C9 | 60,000.00 | 30,000.00 | 49 | 91 | 3,000.00 |
| 12 | CP/EDU/NCB/2024/01/12 | பம்பி நிலையத்தின் (6.0X6.0M) அத்தியவசிய பழுதுபார்த்தல். | 1,945,935.60 | C8,C9 | 38,000.00 | 19,000.00 | 35 | 77 | 2,000.00 |
| **கிராகம அழகியற்கலை ஆசிரியர் கல்லூரி** | | | | | | | | | |
| 13 | CP/EDU/NCB/2024/01/13 | அதிபர் உத்தியோகபூர்வ இல்லம் (18x9M) பழுதுபார்த்தல் | 8,979,061.75 | C6,C7,C8 | 178,000.00 | 89,000.00 | 63 | 105 | 3,500.00 |
| 14 | CP/EDU/NCB/2024/01/14 | மக்குலொழுவ மண்டபத்தின் மேடையை பழுதுபார்த்தல் | 7,383,216.25 | C6,C7,C8 | 146,000.00 | 73,000.00 | 63 | 105 | 3,000.00 |
| 15 | CP/EDU/NCB/2024/01/15 | "ஜன கீ" பிரிவு கட்டிடத்தின் கூரையை பழுதுபார்த்தல் | 1,885,819.00 | C8,C9 | 36,000.00 | 18,000.00 | 42 | 77 | 2,000.00 |
| 16 | CP/EDU/NCB/2024/01/16 | பெக்கேஜ் இல. 01 சித்திரஅறையின் அத்தியவசிய பழுதுபார்த்தல், 120 கட்டிடத்தின் (120x25) பழுதடைந்துள்ள கதவு பழுதுபார்த்தல் நடன அறை அருகில் உள்ள மலசலகூட பழுதுபார்த்தல் | 1,538,472.00 | C8,C9 | 30,000.00 | 15,000.00 | 42 | 77 | 1,500.00 |
| 17 | CP/EDU/NCB/2024/01/17 | நடனப் பிரிவு (80x25) பழுதுபார்த்தல் | 1,521,645.40 | C8,C9 | 30,000.00 | 15,000.00 | 42 | 77 | 1,500.00 |
| 18 | CP/EDU/NCB/2024/01/18 | ஆண்கள் விடுதி (புஞ்சிபங்களா) மலசல கூட பழுதுபார்த்தல் பம்பி நிலையம் இரண்டின் கூரை பழுதுபார்த்தல் | 1,480,196.40 | C8,C9 | 28,000.00 | 14,000.00 | 42 | 77 | 1,500.00 |
| **கம்பளை அரச ஆசிரியர் கல்லூரி** | | | | | | | | | |
| 19 | CP/EDU/NCB/2024/01/19 | இருமாடி வகுப்பறை கட்டிடத்தின் (90'x20') மேம்படுத்தல் | 6,683,737.80 | C6,C7,C8 | 132,000.00 | 66,000.00 | 63 | 105 | 3,500.00 |
| 20 | CP/EDU/NCB/2024/01/20 | நிர்வாகக் கட்டிடம் (33'x18') மேம்படுத்தல் | 6,541,824.50 | C6,C7,C8 | 130,000.00 | 65,000.00 | 63 | 105 | 3,500.00 |
| 21 | CP/EDU/NCB/2024/01/21 | ஆண் மலசலகூட அமைப்பு (8Mx3M) மற்றும் கல்வி சாரா ஊழியர் மலசலகூடம் (2.6Mx1.6M) மேம்படுத்தல் | 2,845,431.50 | C7,C8,C9 | 56,000.00 | 28,000.00 | 42 | 91 | 2,500.00 |
| 22 | CP/EDU/NCB/2024/01/22 | பெக்கேஜ் இல. 02 ஆண் மலசலகூட அமைப்பு (6.0Mx3.2M) மற்றும் கொங்கிறீட் நீர்தாங்கி (10'x20') மேம்படுத்தல் | 2,534,584.10 | C7,C8,C9 | 50,000.00 | 25,000.00 | 42 | 91 | 2,500.00 |

**மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர்,**
**மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி,**
**தொலைபேசி/ பெக்ஸ் இல : 0812224041/42**
**2024.02.01**

### தலாவ பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

தலாவ பிரதேச சபைக்குச் சொந்தமான தலாவ புதிய வர்த்தக கட்டிடத்தொகுதியில் 11 கடை அறைகளை 2024/2026 ஆண்டுகளுக்கான குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கேள்வி விண்ணப்பங்களை 2024.02.05 முதல் 2024.02.20 பி.ப. 2.30 வரை பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.02.21 பி.ப. 3.30 இற்கு முடிவடைவதுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் அன்றே பி.ப. 4.00 இற்கு தலாவ பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

03. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை தலாவ பிரதேச சபைக்குரியது. கடை அறை காணப்படும் நிலையிலேயே கேள்வி கோரப்படும். குறித்த கேள்வி நிபந்தனைகளை கோவை மற்றும் ஏனைய விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

.............................
**செயலாளர்,**
**தலாவ பிரதேச சபை,**
**தலாவ.**

**தொ.பே. இலக்கம் 025-2276344**

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

### பெறுகை அறிவித்தல்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இணைந்த நிறுவனங்களுக்கு துப்புரவு சேவையை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரல் 2024**

01) கீழ் குறிப்பிடப்பட்ட துப்புரவு சேவையை பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
   1. காலி (தடெல்ல) விளையாட்டுத் தொகுதி.
   2. பிங்கிரிய விளையாட்டுத் தொகுதி

02) விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் அமைந்திருக்கும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்கு பிரிவின் சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவுக்கு சமர்ப்பித்த பின் 2024.02.05 ஆம் திகதி தொடக்கம் 2024.02.25 ஆம் திகதி வரை (மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை) அலுவலக நாட்களில் குறித்த பெறுகை ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

03) அனைத்து விலைமனுதாரர்களும் மத்திய வங்கியில் அங்கீரிக்கப்பட்ட எந்த ஒரு வர்த்தக வங்கியில் இருந்தும் பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் பெற்றுக்கொண்ட ரூபா 70,000.00 பெறுமதியான விலைமனுக் காப்பீடு ஒன்றை (பிணை) விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட வடிவத்திற்கு அமைய சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விலைமனு காப்பீடு 2024.02.26 ஆம் திகதி தொடக்கம் 2024.05.26 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

04) குறித்த படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுக்கள் "மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி" என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த விலைமனுக்கள் 2024.02.26 ஆம் திகதி பி.ப. 2.00 வரை ஏற்கப்படுவதோடு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுகின்ற விலைமனுக்கள் பணிப்பாளர் (பெறுகை), விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம்: 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கைகளால் கொண்டுவந்து ஒப்படைக்கும் விலைமனுக்கள் விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும்.

05) விலைமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "துப்புரவு சேவையை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரல் (காலி (தடெல்ல), பிங்கிரிய விளையாட்டு தொகுதி) – 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை திறப்பது 2024.02.26 ஆம் திகதி பி.ப. 2.00க்கு என்பதோடு, அன்றைய தினத்தில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இலக்கம்: 09,**
**பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு 07.**
**தொ.பே. இலக்கம்: 0112 697936**
**தொலைநகல்: 0112 695822**
**மின்னஞ்சல்: info@dosd.gov.lk**

# இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின நிகழ்வின் போது...

















தினகரன் விளையாட்டு

sports.tkn@lakehouse.lk

## சத்ரானின் சதத்துடன் ஆப்கான் அணி 2ஆவது இன்னிங்ஸில் ஸ்திர ஆட்டம்



இப்ராஹிம் சத்ரானின் கன்னி சதத்தின் உதவியோடு இலங்கைக்கு எதிராக இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடி வரும் ஆப்கானிஸ்தான் அணி மூன்றாவது நாள் அட்ட நேர முடிவின்போது ஸ்திரமான ஓட்டங்களை பெற்றுள்ளது.

கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று (04) ஆப்கான் அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 241 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையிலேயே தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. இதன்போது நிதானமாக துடுப்பெடுத்தாடி ஆப்கான் ஆரம்ப வீரர்கள் 106 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். நூர் அலி சத்ரான் 47 ஓட்டங்களை பெற்ற நிலையில் அசித்த பெர்னாண்டோவின் பந்துக்கு ஆட்டமிழந்தார்.

எனினும் மறுமுனையில் சிறப்பாக ஆடிய இப்ராஹிம் சத்ரான் தனது கன்னி டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். நேற்றைய தினம் ஆட்ட நேரம் முடியும் வரை களத்தில் இருந்த அவர் 217 பந்துகளில் 11 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்றார். இதன்போது அவர் ரஹ்மத் ஷாவுடன் இணைந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 93 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டார்.

ஆப்கான் அணி மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவின்போது 75 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 199 ஓட்டங்களை பெற்றது. இதன்படி அந்த அணி தொடர்ந்து 9 விக்கெட்டுகள் கைவசம் இருக்க இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு இன்னும் 42 ஓட்டங்களையே பெறவேண்டி உள்ளது.

முன்னதாக ஆப்கான் அணி முதல் இன்னிங்ஸில் 198 ஓட்டங்களையே பெற்றதோடு அஞ்சலோ மத்தியூஸ் (141) மற்றும் தினேஷ் சந்திமால் (101) ஆகியோரின் சதத்தின் உதவியோடு இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 439 ஓட்டங்களை பெற்றது.

இன்று போட்டியின் நான்காவது நாளாகும்.




### குணசேகரவுக்கு பதில் கசுன்



துடுப்பெடுத்தாடும்போது தலைக் கவசதில் பந்து பட்ட கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடும் வேகப்பந்து வீச்சாளர் சாமிக்க குணசேகரவுக்கு பதில் மாற்று வீரராக கசுன் ராஜித்த அழைக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நேற்று (04) முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணிக்காக குணசேகர 16 ஓட்டங்களை பெற்றிருந்தபோதே நவீட் சத்ரானின் பௌன்ஸர் பந்துக்கு காயத்திற்கு உள்ளானார்.

இதனை அடுத்து மாற்று வீரராக அழைக்கப்பட்ட கசுன் ராஜித்த நேற்று ஆப்கானிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸில் பந்துவச்சை ஆரம்பித்தார்.

தலையில் பந்து பட்டதை அடுத்து குணசேகர மருத்துவமனைக்கு மேலதிக சோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

சர்வதேச செய்திகள்

## ரபாவை நெருங்குகிறது காசா போர்

காசா மீது நேற்றைய தினத்திலும் தொடர்ந்த இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பதோடு, போர் நிறுத்தத்திற்கான முன்மொழிவை பரிசீலிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் கடந்த சனிக்கிழமை இரவு தொடக்கம் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்த 92 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அந்தப் பகுதியின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதில் ரபாவில் இடம்பெயர்ந்தவர்களின் பாலர் பாடசாலை ஒன்றின் மீதும் இஸ்ரேல் குண்டு வீசி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவின் தெற்கு எல்லை நகரான ரபா மீதான இஸ்ரேலின் படையெடுப்புப் பற்றிய கவலை அண்மைய நாட்களில் அதிகரித்துள்ளது. எகிப்து எல்லையை ஒட்டிய இந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதி பாதுகாப்பு வலயம் என இஸ்ரேல் அறிவித்த நிலையில் கடும் தாக்குதல்களுக்கு இலக்காகி வரும் ஏனைய இடங்களில் இருந்து மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் சூழலிலேயே இங்கு இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

“சிறுவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது திடீரென்று குண்டு விழ ஆரம்பித்தது. எனது குழந்தைகள் மீது படுக்கையறை விழுந்தது. இறைவன் ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டான் மூவர் உயிர் தப்பினார்கள்” என்று அஹமது பசம் அல் ஜமால் என்பவர் அழுதபடி ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

200,000 மக்கள் தொகையை கொண்ட ரபா நகரில் தற்போது காசா மக்கள் தொகையில் பாதி அளவானவர்கள் அடைக்கலம் பெற்றிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

காசா இராணுவ நடவடிக்கை ரபா நகரை நெருங்கி இருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லான்ட் கடந்த வியாழக்கிழமை எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தெற்கு நகரான கான் யூனிஸில் இஸ்ரேலின் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருக்கும் நிலையில் காசா மக்கள் மேலும்



தெற்காக ரபாவை நோக்கி இடம்பெயற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாரிஸில் கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடந்து முன்வைக்கப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை முன்மொழிவை செயற்படுத்துவதற்கு சர்வதேச மத்தியஸ்தர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் லெபனானில் உள்ள முன்னணி ஹமாஸ் அதிகாரியான ஒசாமா ஹம்தான், முன்மொழியப்பட்டுள்ள வரைவில் சில விபரங்கள் விடுபட்டிருப்பதாக தெரிவித்தார்.

எமது நிலையை அறிவிப்பதற்கு ஹமாஸுக்கு மேலும் அவகாசம் தேவைப்படுகிறது. என்று கூறிய ஹம்தான், ‘அடிப்படையில், எமது மக்கள் படும் ஆக்கிரமிப்புக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்’ என்றார்.

ஹாஸை ஒழிப்பதாக சூளுரைத்திருக்கும் இஸ்ரேல் கிட்டத்தட்ட கடந்த நான்கு மாதங்களில் காசாவில் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக நடத்திய தாக்குதல்களில் 27,230 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

இந்த போர் நிறுத்த முன்மொழிவை முன்னெடுக்கும் முயற்சியாக எதிர்வரும் நாட்களில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டோனியோ பிளிங்கன் ஐந்தாவது முறையாக மத்திய கிழக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாக இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. பிரான்ஸ் வெளியுறவு அமைச்சரும் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

காசாவுக்கு மேலும் உதவிகள் செல்வது மற்றும் பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வகையில் ஆறு வார போர் நிறுத்தம் ஒன்றையே இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும் எந்த ஒரு போர் நிறுத்தமும் காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் முழுமையாக வாபஸ் பெறுவதற்கு வழிவகுப்பதாக அமைய வேண்டும் என்று கட்டாரைத் தளமாகக் கொண்ட ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பணயக்கைதிகளை விடுவிக்க முடியாத நிலை, இஸ்ரேலிய அரசுக்கு இஸ்ரேலுக்குள் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிரான விமர்சனங்கள் வலுத்து வருகின்றன.

கடந்த சனிக்கிழமை இரவு டெல் அவிவில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்ற பேரணியில் முன்கூட்டிய தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதோடு எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு உடன்பாடு ஒன்றுக்கு செல்வதற்கு கோரப்பட்டது. இஸ்ரேலின் ஏனைய பகுதிகளிலும் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.